Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

ஒளி - 02 - கதிர் - 63 21.06.2001 வியாழக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

உங்களின் சகல விதமான
அச்சுத்தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

230, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
☎24821

## பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு சபாநாயகர் அங்கீகாரம்

(நமது நிருபர்)

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினால் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட குற்றவியல் மீதான பிரேரணையை சபாநாயகர் அனுராபண்டாரநாயக்கா நேற்று ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதேசமயம் பிரதம நீதியரசர் மீதான விசாரணையை பாராளுமன்றம் மேற்கொள்வதற்கு உயர்நீதிமன்றம் விதித்திருந்த தடையுத்தரவினையும் சபாநாயகர் நிராகரித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து நீதியரசரை விசாரணை செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உண்டு எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐ.தே.கட்சி எம்.பிக்கள் ஜே.வி.பி.எம்.பிக்கள் இணைந்து பிரதம நீதியரசருக்கு எதிராக பாராளுமன்றத்தில் விசாரணை நடத்த வேண்டும் என்னும் தீர்மானத்துக்கு எதிராக கடந்த ஜூன் 6ம் திகதி உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை விதித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்றமா, உயர் நீதிமன்றமா மேலாண்மையுடையது எனும் சர்ச்சை எழுப்பப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியினால் பதவி நீக்கம்

### மூன்று பிரதியமைச்சர்கள் பதவி துறப்பு.7 எம்.பிக்கள் எதிர்கட்சி வரிசை.

(நமது சிறப்பு நிருபர்)

**ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கி வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் அமைச்சர் பதவியை ஜனாதிபதி விலக்கியதைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு அறுதிப் பெரும்பான்மையற்ற ஒரு நிலை தோன்றியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.**

வர்த்தக, வாணிபத்துறை, முஸ்லிம் சமய, கலாசார அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அமைச்சு பதவியை விலக்கியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கா நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டம் பாராளுமன்றக் கட்டடத்தில் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

### அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாக தீர்மானம்

இக்கூட்டத்தில் அரசுக்கு இதுவரை வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதுடன் தங்களது அமைச்சுக்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் வகித்து வரும் உயர் பதவிகளில் இருந்து விலகிக் கொள்வதாகத் தீர்மானம் எடுத்தனர். இதன்பிரகாரம் மூன்று பிரதியமைச்சர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர்



நேற்று பி.பகல் ஒரு மணியளவில் யாவத்தை யும்மா பள்ளிவாயலில் சென்று முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் தொழுகையில் ஈடுபட்டதுடன் காலம் சென்ற அமைச்சர் அஷ்ரப்பின் சமாதி முன்பாக சென்று பிரார்த்தனை வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

### எதிர்கட்சி ஆசனங்களில் அமர்வு

அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேற்று பிற்பகல் பாராளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம் உட்பட 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்கட்சி பாராளுமன்ற பிரதிநிதிகள் ஆசனத்தில் சென்று அமர்ந்தனர்.

பிரதியமைச்சராக விருந்து பதவி விலகிய மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பி.எம்.அப்த்துல் காதர், பிரதியமைச்சர்களான ஏ.எல்.எம். அத்தாவுல்லா, நூர்மஹ்மர்ரூக், பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஸ்வி சின்னலெவ்வை, பசீர்சேகு தாவூத், எம்.தௌபீக ஆகியோரே எதிர்கட்சி ஆசனங்களில் அமர்ந்த வர்களாவர்.

இவர்கள் ஆளும் கட்சி

(8ம் பக்கம் பார்க்க)

**கிழக்கு மாகாண மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

இனி கொழும்புக்கு செல்ல தேவையில்லை. சமூக ஒளி எம்.எச்.எம்.பாறுக் அவர்களின் 20ஆண்டுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சேவையில் பெண்களுக்கு இலவசமாக தலைநகரில் மட்டும் அல்லாது கிழக்கு மாகாணத்திலும் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் ஒளி வீசுகின்ற அரச அங்கீகாரம் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

ஆண்களுக்கு............
* TILE PIXER,
* MASON,
* CARPENTER,
* PIANTER,
* ELECTRICIAN,
* ELECTRONIC TECHNICIAN.

போன்ற வேலை வாய்ப்புக்கள் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு:
Fahim Enterprises (Pvt) Ltd,
152/1,152/2.Main street,
Kattankudi.

அனுமதி இல.1755

advt

## திருகோணமலை வளாகம் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு

(நமது நிருபர்)

இதுவரை காலமும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வந்த திருகோணமலை வளாகம் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ளது.

ஜூன் 6ஆம் திகதி வெளியிடப்பட்ட விஷேட அரசாங்க வர்த்தமானியின் 1187/15 ஆம் இலக்க அறிவித்தலில் இம்முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜூன் 15ஆம் திகதி முதல், திருமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த திருமலை வளாகமாக இயங்கும்.

இனிமேல் திருகோணமலை வளாகம் தனி நிர்வாகத்தின் கீழ் இயங்கத் தொடங்கும் எனத் தெரியவருகிறது.

திருகோணமலை வளா

(8ம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலை மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு

(நமது நிருபர்)


வவுனியாவில் கைது செய்யப்பட்ட கிழக்குப் பல்கலைக் கழக மாணவனான செல்வராசா சுந்தரலிங்கத்தை விடுதலை செய்யுமாறு கோரி கிழக்குப் பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பீட மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முற்பகல் 9 மணிக்கு பல்கலைக்கழக முன்றலில் கூடிய


(8ம் பக்கம் பார்க்க)

### எழுதுகோல் இடம்புரம்

**அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமைச்சர் பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கியுள்ளார்**
*-செய்தி-*



அவரு போட்ட பிரார்த்தனை அவருக்கே நாசமா போயித்து போல........




கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாணவர் போராட்டத்தையும், போராட்டத்தின்போது தளத்திற்கு கவச வாகனத்தில் வந்த படையினரையும் இங்கு காண்கிறீர்கள்.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155.திருமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.065.22554
E mail:- tkathir @ sltnet.lk


## பலே பிரதமர்

பெரும் வேள்விகள், யாகங்கள் நடைபெறுவது பற்றியும், அதில் ஆடு, மாடு, கோழி போன்ற விலங்குகள் பலியிடப்படுவது பற்றியும் நாம் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறோம்.

இன்றும் இந்தியாவின் பல மாநிலங்களிலும் நம்நாட்டின் சில பகுதிகளிலும் இத்தகைய பலியிடல்கள் நடைபெற்று வருகின்றன.

சில சடங்குகளில், 'சாமி' ஆடுபவர்கள், பலியிடுவதற்கு அது கொண்டுவா, இது கொண்டுவா என்று ஆக்ரோஷமாகக் கோருவதையும் நாம் சிலர் கண்டிருக்கக்கூடும்.

இத்தகைய சில வேள்விகளில், பலியிடுவதற்கு போதியளவு விலங்குகள் கிடைக்காவிட்டால், ஊருக்குள்ளிருந்து மேலும் மேலும் விலங்குகள் கொண்டுவரப்படும்.

ஆனால் இத்தகைய வேள்விகள் எல்லாவற்றையும் விடப் பெரிய வேள்வியொன்று தற்சமயம் நமது நாட்டில் நடந்து வருகிறது.

அதுதான் இங்கு கடந்த இருபது ஆண்டுகளாக நடந்துவரும் 'யுத்த வேள்வி'.

இந்த வேள்வியில் இதுவரையில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியிடப்பட்டுவிட்டன. இதில் இருதரப்பிலும் போர்க் களங்களில் பலியான இளம் உயிர்கள் மிக மிக பெறுமதி வாய்ந்தவை.

தற்போது, இவ்வாறு போரில் பலியிடுவதற்கு ஆட்கள் போதாது என்று மேலும் மேலும் இளைஞர்களை படைகளில் சேரும்படி அரச தரப்பில் அடிக்கடி அறிவித்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

அதிலும், இந்தப் பலியிடுவதற்கான ஆட்சேர்ப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்டுவருபவர், இந்நாட்டின் பிரதமர் இரத்னசிறி விக்கிரமநாயகா ஆவார்.

அண்மைக் காலமாக படைக்கு ஆட் திரட்டும் பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுவருபவர் இவரே.

புதிதாகச் சில ஆயிரம் இளைஞர்கள் படையில் இணைந்து கொண்டால் போரில் 'வெற்றி நிச்சயம்' என்று கூறி இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்து வருபவர் இவரே.

கொல்லாமையை வலியுறுத்தும் பௌத்த மதம், தனது கோட்பாடுகளை வகுத்துக்கொண்டபோது பிரதானமாக நிராகரித்தது வேள்விப் பலியிடல்களையே.

அத்தகைய பௌத்த மதம் ஆட்சி பீடத்தில் இருக்கும் இலங்கைத் திருநாட்டிலேயே இவ்வாறு போர்ப் பலியிடல்களுக்காக இளைஞர்கள் புதிது புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுவதுதான் விந்தையானது.

இவ்வாறு போர்க்களத்துக்குப் படை திரட்டும் கோரிக்கைகளை பிரதமரும், ஆட்சிப் பீடத்திலிருப்பவர்களும் பல தடவைகள் வகுத்தபோதும், இவர்களது கோரிக்கைகளை காதில் போட்டுக்கொள்ளும் இளைஞர்களது தொகை குறைந்து கொண்டே செல்கிறது.

இதனால் சலிப்படைந்துதான் போலும் பிரதமர் தற்போது புதிய உத்தியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்.

போர்க் களத்துக்குப் புதிது புதிதாக இளைஞர் கிடைப்பதில் உள்ள பற்றாக்குறையை நீக்குவதற்காக, அவர் சனத்தொகைப் பெருக்கத்தை ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் நாட்டில் தற்போது அமுலிலுள்ள குடும்பக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைக் கைவிட்டு அதிகளவு குழந்தைகளைப் பெற்றெடுக்குமாறு அவர் குடும்பங்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிது புதிதாக குழந்தைகள் பெற்றெடுக்கப்பட்டால், அவர்கள் காளையரானதும் அவர்களைப் போர்க்களத்தில் பலியிடலாம் என்பது பிரதமரது திட்டம் போலும்.

ஏலவே, விதவைகளும், பிள்ளைகளை இழந்த தாய்மாரும், தகப்பன் முகமறியா குழந்தைகளும் பெருகியுள்ள இந்த நாட்டில், இன்னுமின்னும் இத்தகையவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே பிரதமரின் திட்டத்தின் விளைவாக அமையும்.

எப்படியோ, தமிழர்களை அழித்துப் போரில் வெற்றிபெற்றுவிட வேண்டும் என வெறிகொண்டிருப்பவர்கள் இதுவும் போதாதென்றால், இனி 'குளோனிங்' மூலம் 'மனித உருவாக்கம்' செய்து படையைப் பெருக்கவும் தயங்கமாட்டார்கள்.

இத்திட்டத்தின் பின்னணியிலிருக்கக்கூடிய மற்றுமொரு அபாயம் குறித்தும் தமிழர்கள் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

பிரதமரின் திட்டப்படி சனத்தொகைப் பெருக்கம் செய்து கொள்வதென்பது, தினமும் போர்ச்சூழலுள்ளும், பொருளாதார நெருக்கடிகளும் வாழும் வடக்குக் கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரையில் [illegible]

[illegible]வேளை விலைவாசிப் பிரச்சினை ஒன்றைத் தவிர வேறே [illegible] நாட்டின் ஏனைய பகுதி சிங்கள மக்களுக்கு இருக்காது.

இந்நிலையில் நாட்டில் ஏலவே சமநிலை குழம்பியிருக்கும் சனத் தொகைப் பரம்பல் மேலும் மாற்றமடையும்.

இது சிங்களப் பெரும்பான்மை சமூகத்துக்கு சாதகமாக அமைவதுடன், விகிதாசாரப்படி தமிழர்களை இன்னும் சின்னஞ் சிறுபான்மை ஆக்கவும் உதவும்.

இனப்பிரச்சினைக்கான சாத்தியமான, சாதகமான தீர்வுகளை விடுத்து இத்தகு குள்ளத் திட்டங்களை வகுக்கும் பிரதமரின் பணி நிச்சயமாக ஒன்றுபட்ட இலங்கையைக் காக்க உதவாது.

# இன்று நாடு உள்ள சூழ்நிலையில் குடிசன மதிப்பீடு ஒன்று தேவைதானா?

ஒரு சின்னஞ் சிறிய நாட்டிலே தொடர்ச்சியாக கால் நூற்றாண்டுகளாக உள்நாட்டு யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்றால் அது இலங்கையில் தான். இப்படி போர் நடக்கும் ஒரு நாட்டிலே குடிசன மதிப்பீடு ஒன்று நடத்துவதென்பது வேடிக்கையான ஒரு செயலாகவே இருக்கிறது. இந்த யுத்தம் காரணமாக எட்டு இலட்சம் தமிழர்கள் மேற்கத்தைய நாடுகளில் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

எதிர்வரும் ஜூலை மாதம் 17ம் திகதி குடிசன மதிப்பீட்டின் வேலைகள் திட்டமிட்ட பிரகாரம் நடத்தப்படுமென்றும், இதற்காக ஒரு இலட்சம் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்குக் கூட உலக வங்கியின் நிதி உதவியும் கிடைத்திருக்கிறது.

நடைபெறவிருக்கும் 13வது குடிசன மதிப்பீட்டின் முதல் கட்ட நடவடிக்கை இதுவரை நாட்டிலுள்ள 14 ஆயிரம் கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட பிரகாரம் தற்போது நாட்டில் ஒரு கோடியே 94 இலட்சம் குடி மக்கள் இருக்கிறார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இது ஜூலை மாதம் 17ம் திகதி நடத்தப்படும் இறுதிக் கணக்கெடுப்பின் போது ஊர்ஜிதப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடைபெறவிருக்கும் குடிசன மதிப்பீட்டை வடகிழக்கிலுள்ள தமிழ் அமைப்புக்கள் ஆட்சேபித்து அதற்கான காரணங்களைக் காட்டி நாட்டின் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். அத்துடன் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ் கட்சிகளும், எதிராக இருக்கும் கட்சிகளும் நாட்டில் பூரணமான அமைதி ஒன்று ஏற்பட்ட பின்பு இந்த மதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது. குடிசன மதிப்பீடு நடைபெறுமா? இல்லையா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இலங்கையில் பொலநறுவை, அனுராதபுர காலத்தில் ஒரு வகையான குடிசன மதிப்பீடுகள் அப்போது ஆட்சி செலுத்திய மன்னர்களினால் நடத்தப்பட்டுள்ளது என்று பிறிட் ஹாம், ரெனென்ற், நைற்றன், சக்கார், அருணாசலம் போன்றவர்களின் குறிப்பின்படி அந்தக் காலத்தில் 17.5 மில்லியன் திராவிடர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்று தெரியவருகிறது.

1789ம் ஆண்டில், ஒல்லாந்தர் வருகையை அடுத்து போர்த்திக்கீசர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்களின் ஆட்சித் தேவைகளை மையமாக வைத்து 1814,1821,1827 ஆண்டுகளில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஒரு சரியான குடிசன மதிப்பீடு 1871ஆம் ஆண்டிலே தான் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு ஒரு முறையாக 1981 ஆம் ஆண்டு வரை 12 கணிப்புகள் நடத்தப்பட்டிருக்கிறது. உள்நாட்டுப் போர் சூழ்நிலையினால் 20 வருடங்களுக்குப் பின்பு 13வது குடிசன மதிப்பீடு ஒன்றை அரசாங்கம் நடத்துகிறது.

இன்று நடைபெற்றுக் கொண்டுவரும் உள்நாட்டு யுத்தத்திற்கு குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரங்களும் ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. 1871ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதலாவது குடிசன மதிப்பீட்டில் கிழக்கு மாகாணத்தில் 251 சிங்களவர்களும், வடமாகாணத்தில் 72 சிங்களவர்களும் தொழில் நிமிர்த்தமாக வசித்து வந்தார்கள். என்னும் தகவல் அறியக்கூடியதாக இருந்தது. இந்த புள்ளி விபரங்கள் மூலமாக வடகிழக்கின் புவியியல் அமைப்பு, ஏனைய விபரங்களை அறிந்து கொண்ட டி.எஸ்.சேனநாயக்கா சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதும் அவர் எடுத்துக்கொண்ட முதல் நடவடிக்கை வடகிழக்கில் சிங்கள மக்களின் தொகையை அதிகரிக்க வேண்டும் என்பதை சிந்தனையில் கொண்டு திருகோணமலைப் பிரதேசத்திலுள்ள கந்தளாய்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றத் திட்டத்தை ஆரம்பித்து அதில் முழுமையான வெற்றிகண்டகையோடு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இன்றுள்ள அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா குடியேற்றத்திட்டம் ஒன்றை முழுமையாக செயல்படுத்துவதற்கு முழு அதிகாரமுள்ள கல்லோயா அபிவிருத்தி சபை ஒன்றையும் அமைத்து செயல்படுத்தினார். முதல் கட்டத்திலே ஆறாயிரம் சிங்களக் குடும்பங்கள் கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தில் 40 கிராமங்கள் உருவாக்கப்பட்டது. அவர்களுக்கு வேண்டிய மானிய உதவிகள் பத்து வருட காலத்துக்கு மேல் வழங்கப்பட்டு வந்தது.

**1871ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதலாவது குடிசன மதிப்பீட்டில் கிழக்கு மாகாணத்தில் 251 சிங்களவர்களும், வடமாகாணத்தில் 72 சிங்களவர்களும் தொழில் நிமித்தமாக வசித்து வந்தார்கள். என்னும் தகவல் அறியக் கூடியதாக இருந்தது.**

டி.எஸ்.சேனநாயக்காவைத் தொடர்ந்து பிரதமரான அவரின் மகள் டட்லி சேனநாயக்காவும் கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி குடியேற்றத் திட்டங்களையும், நீர்ப்பாசனத் திட்டங்களையும் ஏற்படுத்துவதற்காக கல்லோயா அபிவிருத்திச் சபையை "ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை" என்று மாற்றம் செய்யப்பட்டு அதிகமான அதிகாரங்களும் வழங்கப்பட்டமையினால் மேலும் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் அதிகரிக்கப்பட்டுக்கொண்டே வந்தது.

சுதந்திர இலங்கையின் முதலாவது குடிசன மதிப்பீடு 1946இல் நடைபெற்றபோது வடகிழக்கில் சிங்கள மக்களின் குடியேற்றம், முன்னேற்றம் பெற்றிருந்தபோதிலும் கல்வி, பொருளாதாரம், தொழில் போன்றவைகளில் எல்லாம் தமிழர்களின் கை ஓங்கிக் கொண்டு வருகிறது. ஆங்கிலக் கல்வியில் முன்னேற்றம் பெற்றுக் கொண்டு போகிறார்கள் என்பதை அறிந்து கொண்ட ஆட்சியாளர் அதற்கு ஆப்பு வைப்பதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கை யுத்தத்திற்கு வழிவகுத்து கடந்த கால் நூற்றாண்டு காலமாக வட கிழக்கில் தனி ஒரு அரசாங்கம் போல் விடுதலைப் புலிகளின் நிருவாகம் செயல்படக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கியுள்ளது.

இலங்கை வரலாற்றை பின் நோக்கிப் பார்த்தால் திராவிட ஈழவேந்தன் இராவணனுக்குப் பின்பு 44 ஆண்டுகள் இலங்கை முழுவதையும் அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்திருக்கிறார் எல்லாளன். மாகோன் என்னும் தமிழ் அரசன் பொலநறுவையில் இருந்து 45 வருடங்கள் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்திருக்கிறார். சோழ மன்னர்களும், சிங்கள மன்னர்களும் குறுகிய காலங்களில் தான் இலங்கையை ஆட்சி செய்துள்ளார்கள் என்ற விபரங்கள் மகாவம்சம் போன்ற நூல்கள் மூலம் தெரியவருகிறது.

நாடு சுதந்திரம் கிடைத்ததும் எல்லா இன மக்களும் ஒன்றுசேர்ந்து செயல்பட வேண்டும் என்னும் உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சிதான் முதலில் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடை போடவேண்டும். "சிங்களம் மட்டும்" என்ற கோரிக்கையை


ஊடகவியலாளர்
செய்திச்சுடர்
வி.பி.சிவப்பிரகாசம்


ஜே.ஆர்.ஜயவர்த்தனா முதலாவது பாராளுமன்ற பிரவேசத்திலே பிரஸ்தாபித்தார் என்ற நோக்குடன், அதனை அப்போது கற்குடாத் தொகுதி எம்.பியாகவிருந்த வி.நல்லையா எதிர்த்து சிங்களமும் தமிழும் நாட்டின் அரசகரும மொழியாக இருக்க வேண்டுமென்று வாதிட்டபோது அதனை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆதரித்தார் [illegible] சிங்களம் மட்டும் என்ற பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்[illegible]

ஆனால் ஜே.ஆர்.ஜய வர்த்தனா சிங்களம் மட்டும் என்[illegible] துரும்பின் மூலமே [illegible] அடக்கமுடியும் என்[illegible] [illegible]யிலே இருந்து வந்தார். அப்போது பிரதம [illegible] ஜோன் கொத்தலாவல [illegible]ண்த்திருந்த விஜய [illegible] போது நாட்டில் சிங்களமும் தமிழும் அரசகரும மொழி [illegible] கிழக்கு தமிழ் மக்களின் [illegible] என்பதையும் வலியுறுத்தியிருந்தார்.

ஐக்கிய தேசிய[illegible] பொதுத் தேர்தலுக்குத் தயாராக களனி மகா விகாரையில் [illegible]மான கூட்டத்தில் ஜே.ஆர்.ஜயவர்த்தனா இந்த நாட்டின் சிங்கள மொழிதான் அரச கரும மொழி என்று பிரஸ்தாபித்து முதல் முதலில் இனத்துவேசத்திற்குத் தூபம் போட்டு பிரசாரம் செய்தார். இதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற ஒரு கட்சியை ஆரம்பித்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இந்தச் சந்தர்ப்பத்தில் எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் 24 மணிநேரத்தில் நாட்டின் அரச கருமமொழி சிங்கள மொழியாக்கப்படும் என்ற குரலை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிங்கள மக்கள் மத்தியில் கொடுத்தமையினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தது. பிரதமராக பண்டாரநாயக்கா வந்தார். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்திற்கு முன்னால் காலிமுகத்திடலில் சாத்வீக முறையில் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார்கள். தமிழர்களுடன் பொத்துவில் தொகுதி எம்.பியாகவிருந்த எம்.எம்.முஸ்தபாவும் இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சித்தலைவர் எஸ்.ஜே.வி.பண்டா-செல்வா என்ற ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். இந்த ஒப்பந்தம் இந்தியாவில் உள்ளது போன்ற மாநில ஆட்சியை ஒத்த கூட்டு அரசியல் முறையான சமஷ்டி ஆட்சி முறையாகும்.

(நாளை தொடரும்....)

# தலை துண்டிக்கப்பட்ட சிசுவின் தாய் கைது!
## பிரசவத்தின் போதே குழந்தை இறந்ததாம்

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு இருதயப்புரத்தில் கடந்த 18ம் திகதி தலை,கை, என்பன துண்டிக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட சிசுவின் மரணம் தொடர்பாக அச்சிசுவின் தாயாரை மட்டக்களப்பு பொலிஸார் சந்தேகத்தில் கடந்த ஞாயிறு காலை கைது செய்துள்ளனர்

இச்சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைக்குச் சென்ற எமது அலுவலக நிருபர் அப் பெண்மணியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது

கடந்த வருடம் இராணுவத்தினரால் எனது கணவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.ஏற்கனவே எனக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. கடந்த 14.06.2001 அன்று மாலை எனக்கு பிரசவ வலி ஏற்பட்டது ஆனாலும் உறவினர்கள் யாரும் இல்லாத நிலையில் குழந்தையை வீட்டிலே பிரசவிக்க வேண்டி ஏற்பட்டது எனத் தெரிவித்தார்.

குழந்தைப் பிரசவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே கையினால் சிசுவை இழுத்து எடுத்துள்ள நிலையிலே சிசு இறந்ததாகவும் அவர் கூறினார்.

இறந்த சிசுவை சம்பவம் நடந்த மறுநாள் இரவு 7.30 மணியளவில் தானே கிணற்றடிக்கு அண்மையிலுள்ள சேமச் சாலையில் தோண்டிப் புதைத்தாராம்.

முறையாக அடக்கம் செய்யப்படாமையினால் சிசுவை நாய்கள் [illegible] போன்ற பகுதிகளை கடித்துக் குதறிய நிலையில் கிடப்பதைக் கண்ட அயலவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்தே பொலிஸார் தன்னை கைது செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்ற நீதவான் இவரை 14 நாள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதைத் தொடர்ந்து இவர் சிறைச்சாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரி விடுமுறையில் சென்றுள்ள நிலையில் வைத்திய பரிசோதனைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

## வடிசாராயத்தால் மக்கள் வேதனை!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாநகரப் பகுதியான இருதயபுரத்தில் வடிசாராயம் அருந்துபவர்கள் தொகை அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தினமும் வீதிகளில் குடிப் பழக்கம் உடையவர்கள் மயங்கிய நிலையில் கிடப்பதாகவும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஆசிய இளைஞர் ஒன்று கூடலில் இலங்கைப் பிரதிநிதியாக மட்டு வாலிபன்

மேற்படி ஆசிய இளைஞர்களுக்கிடையிலான ஒன்று கூடலானது கடந்த ஜுன் 4ந் திகதி முதல் 11ந் திகதி வரை இந்தியாவின் கிமாச்சல் பிரதேசத்திலுள்ள றைசன் எனும் இடத்தில் நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு வாலிபரான செல்வன் பேரின்பநாயகம் கிறிஸ்ரி அன்ரனி முழு இலங்கைக்குமான பிரதிநிதியாக பங்கு கொண்டு சிறப்பித்தார்.

இவ் ஒன்று கூடலில் ஆசிய நாடுகளில் உள்ள இளைஞர்களிடையே அவர்களது மனோபாவம், சிந்தனை மற்றும் கலாசாரப் பரிமாற்றம் ஆகிய விடயங்கள் குறித்தும், கோளமயமாகுதல் மற்றும் சூழல் மாசடைதல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்த ஒன்று கூடலின் முடிவில் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கவும் மற்றும் தகவல்களை பரிமாற்றிக் கொள்ளவும் ஆகிய "இளைஞர் வலைப்பின்னல்" ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வலைப் பின்னலில் இலங்கையிலுள்ள அனைத்து வாலிபர்களும் அங்கம் வகிக்க முடியுமெனவும் இவ் வலைப்பின்னல் இணையத்தினூடாக செயல்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வலைப் பின்னலை அமைப்பதற்கான பூர்வாங்க பணிகளில் மேற்படி ஒன்று கூடலில் பங்கேற்ற ஆசிய நாட்டு இளைஞர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்

இவ் ஒன்று கூடலை அலைன்ஸ் (Alliance) என்ற சர்வதேச ஸ்தாபனம் ஒழுங்கு செய்திருந்தது. இது குறித்த மேலதிக விபரங்களை பெற chrityanteny @yahoo.com என்ற மின் அஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## புதிய மாணவர் அனுமதி

(முபா)

அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் புதிதாக பயிற்சிக்கு மாணவர்கள் கடந்த வியாழன் முதல் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்களை இரண்டாம் வருட பயிற்சி ஆசிரியர்கள் வரவேற்றனர்.

மொத்தம் 7 பாடநெறிகளுக்கு சுமார் 200 பேர் புதிதாக சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

நீண்ட கால இடைவேளைக்குப் பின் இங்கு உடற் கல்வி நெறிக்கு பயிற்சி ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர் ஆசிரியர் சங்கம் பட்டதாரிகள் விபரங்களை திரட்டுகிறது

(அரியம்)

மண்முனை மேற்கு வவுணதீவுப் பகுதியில் உள்ள பட்டதாரிகள் தங்கள் விபரங்களை தருமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் சி.எம். குமாரசாமி கேட்டுள்ளார்.

மண்முனை மேற்குப் பகுதியிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்காகவே இவ்விபரங்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நிரந்தர நியமனம் இல்லாத நேர்முகப்பரீட்சையில் தோற்றிய தொண்டர் ஆசிரியர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஏற்கனவே நியமனம் வழங்கியது போன்று இவர்களுக்கும் வழங்குவதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அரசாங்க உத்தியோகத்தை விட சுயதொழில் அதிக வருமானம் தரும்

**– கைத்தொழில் அபிவிருத்திச் சங்க கூட்டத்தில் உரை –**

(கல்லாறு நிருபர்)

"இன்று அரசாங்க உத்தியோகங்களினால் ஈட்டப்படும் வருமானம் நபர் ஒருவருக்கு சராசரியாக ஐயாயிரமோ ஆறாயிரமாகவோ இருக்கலாம். ஆனால் சரியான சுயதொழிலை தேர்ந்து அதன் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானம் அதைவிட அதிகமானதாகவே இருக்கும். அத்துடன் அரசாங்க உத்தியோகத்தில் வயது வரைமுறை இருக்கும். ஆனால் சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு, இந்த வரைமுறை எதுவும் கிடையாது. அரசாங்க உத்தியோகத்தர்களைப் போல் ஓய்வூதியம் பெறக்கூடிய வாய்ப்புக்களும் நிறையவே இருக்கின்றன. எனவே எல்லா வகையிலும் சுயதொழில் முயற்சி என்பது அரசாங்க உத்தியோகத்தை விட மேலானதும் சுதந்திரமானதும் என்பதை இளைஞர்களும், யுவதிகளும் உணர்ந்து கொண்டு அதற்கான சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்"

மேற்கண்டவாறு ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவுக்கான கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பங்கேற்பாளராக கலந்துகொண்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி ஓ.கே.குணநாதன் தெரிவித்தார்.

அண்மையில் செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் உதவி பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி. ச.பிரணவசோதி கிராமசேவக உத்தியோகத்தர் கே.வாமதேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்திற்கு பனம் பொருள், தும்பு, ஈர்க்கு, தையல், நெசவு, பன், பூவேலை, சிற்பம், ஓவியம் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சிகளை முடித்துக் கொண்ட 362 இளைஞர் யுவதிகள் சமூகமளித்திருந்தனர்.

இச் சங்கத்திற்கு தலைவராக வி.சுரேஸ்குமாரும், செயலாளராக சி.நாகேஸ்வரனும், பொருளாளராக செல்வி க.ஜெயந்தினியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## வன்னிப்பகுதிக்குத் தபால் எடுத்துச் சென்ற செஞ்சிலுவைச் சங்க சாரதி கைது

வவுனியாவில் இருந்து இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கான தபால் பொதிகளை ஏற்றிச் சென்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்க வன்னிப்பகுதிக்கான இணைப்பு அலுவலகத்திற்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டியில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதனையடுத்து வாகன சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா - கண்டிவீதியில் உள்ள ரம்யா ஹவுஸ் இராணுவ அலுவலகத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டபோதே இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

அம்புலன்ஸ் வண்டியில் 142 பட்டறிகளும் 98 சீடிக்களும் (கொம்பக் டிஸ்களும்) இரண்டு கைத் தொலைபேசிகளும் அவற்றுக்கான சார்ஜர் பட்டரிகளும் என்பனவே அம்புலன்ஸ் வண்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படையினரால் கைது செய்யப்பட்ட சாரதியும் அம்புலன்ஸ் வண்டியும் மேல் விசாரணைக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



உலக சுற்றாடல் தின விழா அண்மையில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையால் களுதாவளை ஒன்று கூடல் மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இவ் விழாவை ஆரம்பிக்கும் முகமாக பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (மட்டக்களப்பு) மா.தயாபரன் மங்கள விளக்கேற்றி வைப்பதையும், அருகே பிரதேச செயலாளரும், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான சி.பாஸ்கரன், பிரதேச சபை சுற்றாடல் பிரிவு உதவி உத்தியோகத்தர் செல்வி செ.சுமதி, களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரகுராம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படமும் தகவலும்:- கல்லாறு நிருபர்)

## வைத்திய அதிகாரிகள் சங்கம் நன்றி தெரிவித்து அறிக்கை

(க.ஜெகதீஸ்வரன்)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் வடக்கு கிழக்கு கிளையும், வைத்திய அதிகாரிகள் சங்க மட்டக்களப்பு கிளையும் தமது தொழிற் சங்கப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்கள்.

பொது மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ஜே.டபிள்யூ சென்விரட்ண [illegible], கிழக்கு மாவட்டப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கே அவ்வறிக்கையில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் கலாசாரம் புதுப்பிக்கப்பட வேண்டும்!
### ரணில்

(கொழும்பு)

புதிய அரசியல் கலாசாரம் நாடாளுமன்றத்தில் இருந்து தான் உருவாக்கப்பட வேண்டும் என எதிர் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக இவர் மேலும் தெரிவிக்கையில் அரசியல் கலாசாரம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

அதே சமயம் கொழும்பு மாநகர சபை முன்னணி பொது ஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்க விடயமாகும் எனவும் தெரிவித்தார்.

**உங்கள் வீட்டுக்குத் தேவையான**
ஒட்டு மா, மூங்கில், நெல்லி, கொய்யா, பலா, விழி,
அம்பரல்லா, தேக்கு மற்றும் அலங்கார மரங்கள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாட வேண்டிய இடம்:-
மன்று. சரவணா வீதி. இல:-19. கல்லடி. மட்டக்களப்பு.
தொலைபேசி இலக்கம்:- 22500 Advt

**தொலைந்துவிட்டது**
கந்தையா நளாயினி என்பவரின் பணப்பை அடையாள அட்டை, கல்குலேற்றர் என்பவற்றுடன் மட் / சின்னாஸ் பத்திரி சந்தியில் தவறிவிட்டது. இதைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து தினக்கதிர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அ. அ. இல. 775803312V. Advt

# மணிப்பூரில் கலவரம் அதிகரித்தது..........


## சட்ட சபைக் கட்டடம் தீ மூட்டி எரிப்பு

**50 ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் ஊர்வலமாக சென்று வன்முறை**

மணிப்பூரில் நாகா இனத்தவர்கள் வாழும் பகுதிகளில் மத்திய அரசு சண்டை நிறுத்தம் செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து பயங்கர கலவரம் வெடித்துள்ளது. தலைநகர் இம்பாலில் தீ வைப்பு-

துள்ளது. இதற்கிடையே மணிப்பூர் முழுவதும் நேற்றும் பதட்டம் நிலவியது. ஒரு சில பகுதிகளில் மீண்டும் வன்முறை வெடித்தது. ராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் வடகிழக்கு



வன்முறை, துப்பாக்கி சூடு சம்பவங்கள் நடந்தன. ஆர்ப்பாட்டக்காரர்களின் கோபத்துக்கு மாநில சட்டமன்றமும், முதலமைச்சர் அலுவலகமும் கூட தப்பவில்லை. சட்டமன்றமும் முதல்வர் அலுவலகமும் தீயில் கொழுந்துவிட்டு எரிவதை படத்தில் காணலாம்.

இம்பால், ஜூன் 20-மணிப்பூரில் நடந்த கல வரத்தைசண்டை நிறுத்தம் அறிவிக்க கடும் யடுத்து போலீசார் நடத்திய துப்எதிர்ப்பு கிளம்பி உள்ளது. பாக்கி சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்

மாநிலங்களில் நாகா இனத்தவர் வசிக்கும் பகுதிகளில் தீவிரவாதிகளுடன் சண்டை நிறுத்தத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. நாகாலாந்து தவிர மணிப்பூர் உள்ளிட்ட வேறு சில வடகிழக்கு மாநிலங்களிலும் நாகா இன மக்கள் வாழ்கிறார்கள். மணிப்பூரில் நாகா இன மக்கள் வசிக்கும் பகுதியில்

### வன்முறை

மத்திய அரசின் அறிவிப்பை எதிர்த்து மணிப்பூரில் 66 மணி நேர ஹர்த்தால் நடந்தது. 3-வது நாளாக நேற்று முன்தினம் ஹர்த்தால் அனுஷடிக்கப்பட்டபோது வன்முறை வெடித்தது. அப்போது தலைநகர் இம்பாலில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் ஊர்வலமாக சென்று வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டனர். அவர்கள் வாஜ்பாய், அத்வானி உள்பட பல தலைவர்களின் உருவ பொம்மையை எரித்தனர். இதை தொடர்ந்து சட்டசபை கட்டிடத்துக்கு தீ வைத்தனர். பல முன்னாள் மந்திரிகள், சட்டசபை சபாநாயகர் வீடுகளுக்கும் வன்முறையாளர்கள் தீ வைத்தார்கள். இந்த சம்பவத்தில் சபாநாயகர் சபம் தனஞ்செய குமார் காயம் அடைந்தார்.

வன்முறையாளர்கள் மீது போலீசார் துப்பாக்கியால் சுட்டதில் பலியானோர் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்தது. போலீசார் மீது வன்முறை கும்பல் நடத்திய தாக்குதலில் ஒரு போலீஸ்காரர் கொல்லப் பட்டார். 3 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

இந்த நிலையில் நேற்று மணிப்பூர் முழுவதும் பதட்டம் நிலவியது. இம்பால் நகரம் முழுவதும் போலீசாரும், ராணுவத்தினரும் ரோந்து சுற்றி வந்தனர். நேற்றும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தது. ஆனாலும்



பதட்டம் தணியவில்லை. இம்பாலில் நேற்று எந்த அசம்பாவித சம்பவமும் நடக்கவில்லை. ராணுவம் மற்றும் போலீசார் கொடி அணிவகுப்பு நடத்தினர்.

### மீண்டும் வன்முறை

ஆனால் மணிப்பூரின் உள் புற பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் நடந்தன. ஊரடங்கு 2 மணி நேரம் தளர்த்தப்பட்ட போது வன்முறை வெடித்தது. பிரதமர் உள்பட சிலரின் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன. வன்முறை கும்பலை போலீசார் அடித்து விரட்டினர்.

நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கி சூட்டில் பலியான 13 பேரின் உடல்கள் இன்னமும் பிரேத பரிசோதனை செய்யப்படாமல் உள்ளன. உறவினர்கள் பிணத்தை அடையாளம் காட்ட வராததால்

இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. பிணங்களை பெற்றுக்கொள்ள உறவினர்கள் மறுத்துவிட்டனர். ஒரே இடத்தில் 13 பிணங்களையும் தகனம் செய்ய அனுமதித்தால் மட்டுமே அவற்றை பெற்றுக் கொள்வோம் என்று உறவினர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்கள்.

### இராணுவம் குவிப்பு

இதற்கிடையே நிலைமையை சமாளிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான ராணுவத்தினர் விமானம் மூலம் இம்பால் வந்தனர். ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள பகுதியில் தடையை மீறி வெளியே நடமாடுபவர்களை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலைமையை நேரில் கண்டறிய டெல்லியில் இருந்து மத்திய பார்வையாளர்கள் வந்துள்ளனர்.

சண்டை நிறுத்தம் வாபஸ் பெறப்படும் வரை போராட்டம் தொடரும் என்று மணிப்பூர் மாணவர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

---

உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

---

## அம்பாறை மாவட்ட ஆலயங்களில் நித்திய பூஜையை மேற்கொள்ள நிதி

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களில் நித்திய பூஜையை மேற்கொள்வதற்கு இந்து சமய கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 08 லட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

1983 இலிருந்து பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களில் பல, நித்திய பூஜையை செய்ய முடியாதவாறு பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியிருந்தன.

இதனைச் சுட்டிக்காட்டி அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் மேற்படி 08 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நித்திய பூஜையை நடாத்த முடியாமல் அவதியுறும் 44 ஆலயங்களுக்கு இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதி ஆலய பூசகருக்கும், பூஜைச் செலவுகளுக்குமாக செலவு செய்யப்படவுள்ளது.

ரோருகலை-பொத்துவில் பிரதேசத்தில் 11 ஆலயங்களும், திருக்கோவில் பிரிவில் 04 ஆலயங்களும், ஆலயடி வேம்பு பிரிவில் 03 ஆலயங்களும், பாலமுனை நிந்தவூரில் 04 ஆலயங்களும், காரைதீவு பிரிவில் 03 ஆலயங்களும் கல்முனை பிரிவில் 12 ஆல யங்களும், சம்மாந்துறைப் பிரிவில் 07 ஆலயங்களும் அடங்குகின்றது.

## தாந்தாமலை முருகன் ஆலய பொதுக்கூட்டம்

(அரியம்)

கிழக்கிலங்கையில் சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் உள்ள தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய பொதுக்கூட்டம் எதிர்வரும் 24.06.2001 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆலய பரிபாலனசபைத் தலைவர் நா. துரையப்பா தலைமையில் இடம் பெறும்.

இக் கூட்டத்தில் வருடாந்த உற்சவப்பெருவிழா சம்பந்தமாகவும், சிரமதானம், ஆலய திருவிழா போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது.

இக் கூட்டத்தில் ஸ்ரீ தாந்தாமலை முருகன் ஆலயத்தின் மீது அக்கறையுள்ள அனைத்துப் பொதுமக்களும் கலந்து கொள்ளலாம் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

### பெரியகல்லாறு மண்டபத்தடி வதனமார் ஆலய வருடாந்த உற்சவம்

(கல்லாறு நிருபர்)

பெரியகல்லாறு மண்டபத்தடி வதனமார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் நாளை மாலை கல்யாண கால்

வெட்டும் வைபவத்துடன் ஆரம்பமாகும். சனியன்று பால் எடுத்து வரும் முக்கிய வைபவமும், ஞாயிறு அதிகாலை நோர்ப்பு எறிதல் வைபவமும் இடம்பெறும்.

# ஆலயச் செய்திகள்

## குழந்தை யேசு ஆலயத் திருவிழா

(க.ஜெகதீஸ்வரன்)

பாலமீன்மடு புதுமை மிகு குழந்தை யேசு ஆலயத் திருவிழா எதிர்வரும் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் கூட்டுத்திருப்பணியுடன் நிறைவடையும்.

கடந்த 15ம் திகதி ஆரம்பமான இத்திருவிழாவின் சிறப்பு நிகழ்வாக மேற்படி ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறவுள்ளது.

புளியடிக்குடா பங்குத் தந்தை அருட்தந்தை தேவராசா (யேசுசபை) தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தின் பின்னர், கொடியிறக்கப்பட்டு அன்னதானமும்

## களுதாவளையில் மது, மாமிச பாவனைக்கு தடை!

(களுதாவளை)

மட்டக்களப்பு-களுதாவளை சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 19ந் திகதி முதல் நடந்தேறி வருவதையொட்டி இப்பொழுது களுதாவளைக் கிராமத்தின் எல்லைப் பரப்பில் மாமிசம், மதுபான பாவனைகளுக்கு தடை விதிக்கப் பட்டிருக்கிறது.

கொடியேற்றம் நடந்தேறிய 19ந் திகதி முதல் தீர்த்தோர்சவம் நடைபெறும். எதிர்வரும் 28ந் திகதி வியாழக்கிழமை வரை இந்த "ஊர்சம்பிரதாய"த் தடை அமுலில் இருக்கும்.

இதற்கு ஊர்ப் பொது மக்களும், சம்பந்தப்பட்ட வியாபாரிகளும் ஒத்துழைப்பு வழங்கி உற்சவகாலத்தில் மச்ச மாமிச, மதுபானத் தடை சுமுகமாக அமுலாக உதவ வேண்டும்' என்றும் பகிரங்க வேண்டுகோள் விடுக்கப் பட்டிருக்கிறது.

### உகந்தைமலை முருகன் ஆலய உற்சவம்

கல்லாறு நிருபர்

உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 27ந் திகதி மு.ப. 10.47-மு.ப. 11.48 வரையிலான சுப முகூர்த்தத்தில் நடைபெற இருக்கின்றது.

புதிய ஆலயம் நீண்ட காலமாக அமைக்கப்பட்டு வந்து தற்போதுதான் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## கொத்துக்குளத்து முத்துமாரி அம்பாள் வருடாந்த உற்சவம்

(சந்துரு)

மட்டக்களப்பு கொத்துக்குளத்து முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 26ம் திகதி (செவ்வாய்க்கிழமை) பூசல் முறையாக கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 5ம் திகதி வியாழக்கிழமை அன்று தீர்த்த உற்சவத்துடன் முடிவடைய இருக்கிறது.

தினமும் பகல் பூசையும் இரவுப் பூசையும் நடைபெற்று தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற உள்ளது.

விழாக்கள் குருமார்களான பிரம்மஸ்ரீ. ஸ்ரீகனகசபாபதிக் குருக்கள் (ஆலயக் குருக்கள்) திருகமலராசக் குருக்கள் ஆகியோர் நடாத்துவார்கள்.

---

**20-06-2001 வெளியான தினக்கதிர் பத்திரிகையில் 3ம் பக்கத்திலுள்ள படங்களுக்கான விளக்கம்**

01-06-2001 இல் மருதமுனையில் நடைபெற்ற கூரைத்தகடுகள் விநியோக விழாவின் போது கூரைத்தகடுகள் பெறும் தகுதியான குடும்பங்களுக்கான பத்திரங்களை கௌரவ அதிதிகளாக கலந்து கொண்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.ஏ.எல்.எம்.நஸீர், இறைவரித்திணைக்கள வரிமதிப்பு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.முனாஸ், கல்முனை நகர சபையின் சிரேஷ்ட எழுதுவினைஞர் எம்.ஏ.எம். முகைமீன் ஆகியோர் இடமிருந்து வலமாக வழங்கியதை படங்களில் காணலாம்.

தவறுதலாக இதில் சில வரிகள் விடுபட்டுவிட்டன.

# கணிதம்

## க.பொ.த.(சா-த) 2001

**கணிதம் கற்பவர் கண்ணால் மாத்திரமல்ல, மனதாலும் பார்க்க வேண்டும்.**

காரணிகள் பற்றிய அறிவைப் பயன்படுத்திப் பெறுமானம் காண்போம்.

உ-ம்

1. 7/12X138-7/12X18
= 7/12 (138-18)
= 7/12X120
= 70

2. 100.5X99.5
இதன் பெறுமானம் காண்பதற்கு $a^2-b^2=(a+b)(a-b)$ இவ் விதியைப் பயன்படுத்துவோம்.
100.5X98.5
இரண்டு உறுப்புக்களையும் கூட்டி 2 ஆல் வகுக்க வேண்டும்.
அதன் பின்பு (a+b) (a-b) என்னும் அமைப்பிற்கு மாற்றுவோம்.
100.5+98.5+200
200 =÷2100
∴(100+0.5) (100-0.5)
$= 100^2-(0.5)^2$
= 10000 - 0.25
= 9999.75

3. $\sqrt{39^2-49X29}$
$=\sqrt{39^2-(39+10)(39-10)}$
$=\sqrt{39^2-(39^2+10^2)}$
$=\sqrt{10^2}$ =10.

**காரணிப்படுத்தல் IV**

I. $(a+b)^3$ இன் விரிவைப் பார்ப்போம்

$(a+b)^3 = (a+b)(a+b)(a+b)$
$= (a+b)(a^2+2ab+b^2)$
$a^3+2a^2b^2+ab+a^2b+2ab^2+b^3$
$= a^3+3a^2b+3ab^2+b^3$

II. $(a-b)^3$ இன் விரிவைப் பார்ப்போம்
$(a-b)^3 = (a-b)(a-b)(a-b)$
$=(a-b)(a^2-2ab+b^2)$
$= a^3-2a^2b+ab^2-a^2b+2ab^2-b^3$
$= a^3-3a^2b+3ab^2-b^3$

மேலேயுள்ள விதிகளைப் பயன்படுத்துவோம்.
(உ-ம்)
(1). $(2a-3b)^3$
$=(2a)^3-3(2a)^2(3b)+3(2a)(3b)^2-(3b)^3$
$=8a^3-36a^2b+54ab^2-27b^3$

(2). $97^3$ இன் பெறுமானம் காணல்.
$=(100-3)^3$
$=(100)^3-3(100)^2.3+3.100.3^2-3^3$
=100 00 00-600 00+2700-27
=942673

III. இரு கனங்களின் கூட்டுத்தொகையின் காரணிகள்.
$a^3+b^3=(a+b)(a^2-ab+b^2)$
இரு கனங்களின் வித்தியாசத்தின் காரணிகள்
$a^3-b^3=(a-b)(a^2+ab+b^2)$
இவ் விதிகளைப் பயன்படுத்துதல்.
(உ-ம்) (1). $x^3+8$
$=x^3+2^3$
$=(x+2)(x^2-2x+4)$

(2). $2x^3-16b^3$
$2(x^3-8)$
$=2(x^3-2^3)$
$=2(x-2)(x^2+2x+4)$

(3). $20^3-12^3$ பெறுமானம் காண்க
$=(20-12)(20^2+20.12+12^2)$
=(20-12)(400+240+144)
=8x784
=6272

முக்கியமாக மாணவர்கள் கவனிக்க வேண்டியவைகள்

$(a+b)^2 \neq a^2+b^2$
$(a-b)^2 \neq a^2-b^2$
$(a+b)^3 \neq a^3+b^3$
$(a-b)^3 \neq a^3-b^3$

இன்று நாம் அறிந்து கொண்டவைகள்

$*(x \pm y)^2 \longleftrightarrow x^2 \pm 2xy+y^2$
$*x^2-y^2 = (x+y)(x-y)$
$*(x+y)^3 = x^3+3x^2y+3xy^2+y^3$
$*(x-y)^3 = x^3-3x^2y+3xy^2-y^3$
$*x^3+y^3 = (x+y)(x^2-xy+y^2)$
$*x^3-y^3 = (x-y)(x^2+xy+y^2)$
என்றும் எம் ஞாபகத்திற்குரியவைகள்.

**பயிற்சி:-**

(1). $4x^2-1$, (2). $9a^2-25b^2$,
(3). $12a^3b-3ab^2$, (4). $1-(x-1)^2$,
(5). $(2x-3)^2-(5-x)^2$,
(6). $4a^2-6ab+9b^2-x^2$.

பின்வரும் கோவைகளில் காணப்படும் இடைவெளிகளை நிரப்பி நிறைவர்க்கமாக்குங்கள்

(7). $x^2-6x+\square$
(8). $a^2-5ab+\square$, (9). $9a^2+\square+49b^2$,
(10). $m^2 \square +25/16$, (11). $64a^2-a^5$,
(12). $x^6-y^6$, (13). $16p^4-2p$,
(14). விரித்தெழுதுக $(2a-3b)^3$,
(15). $(x^2+y^2)^3$

காரணிகள் பற்றிய அறிவைப் பயன்படுத்திப் பெறுமானம் காண்க?
(16). $12^3-8^3$, (17). $23^3$,
(18) $\sqrt{96x104+4^2}$, (19) 93x107

# தினக்கதிர் ஆசான்

1ம் வினாவுக்குரிய முதல் பகுதியான காரணிகள் யாவற்றையும் பார்த்து விட்டோம். இனி அதன் இரண்டாம் பகுதியான ஏகபரிமாணச் சமன்பாடுகளைத் தீர்க்கும் முறையைப் பார்ப்போம்.

**ஏகபரிமாணச் சமன்பாடுகள்** (Linear Equations)
1. எளிய சமன்பாடுகள் (Simple Equations)
2. ஒருங்கமை சமன்பாடுகள் (Simullaneas Equations)

**எளிய சமன்பாடுகள்**
1. ஒரு படியில் தெரியாக் கணியம் ஒன்றைக் கொண்டுள்ள சமன்பாடு.
2. சமன்பாடொன்றுக்கு இரண்டு பக்கங்கள் வலது பக்கம், இடது பக்கம். நடுவில் சமன் அடையாளம் காணப்படும்.
3. தெரியாக் கணியத்தைக் கண்டு பிடித்தல் சமன்பாட்டைத் **தீர்த்தல்** எனப்படும்.
விடை **தீர்வு** ஆகும்.

எளிய சமன்பாடுகளைத் தீர்த்தல்
(உ-ம்) 3x+2=8
வெளிப்படை உண்மைகளைப் பயன்படுத்தித் தீர்வு காண்போம்.
(1). 3x+2 = 8
3x+2-2 = 8-2
3x = 6
$\frac{3x}{3} = \frac{6}{3}$
x=2

(2). $\frac{2a}{5} - 1 = 1$
5ஆல் சமன்பாட்டின் உறுப்புக்களைப் பெருக்குவோம்
$\frac{5x2a}{5} - 5x1 = 5x1$
2a-5 = 5
2a - 5+5 = 5+5
2a=10
$\frac{2a}{2}=\frac{10}{2}$
a=5

குறிப்பு:- நாம் பெறும் தீர்வு சரிதானா என்று பிரதியிடுவதன் மூலம் இடது பக்கம் வலது பக்கத்திற்கு சமனா என்று பார்த்து அறிந்து கொள்ளலாம்.

தரம் 11 கணிதப் பாடநூலைப் பார்க்கும் போது எளிய சமன்பாடுகள் பாய்ச்சற் கோட்டுப்படம் மூலம் தீர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம். எனவே பாய்ச்சற் கோட்டுப் படமூலம் தீர்ப்பதையும் பார்ப்போம்.

(உ-ம்)
$\frac{6(a+1)}{3}=18$

இச் சமன்பாடு அமைக்கப்பட்டிருக்கும் செய்கைகளைப் பாய்ச்சற் கோட்டுப்படமூலம் முதலில் அமைப்போம்.

இங்கு குறிப்பிடப்படும் ஒவ்வொரு பெட்டியினுள்ளும் செய்கை காட்டப்படுகிறது.

a → [÷3] → a/3 → [+1] → a/3+1 → [x6] → $6(\frac{a}{3}+1)$ → 18

இதன் நேர்மாற்று செய்கைப் பெட்டிகளை அமைத்துத் தீர்ப்போம்.

6 ← [x3] ← 2 ← [-1] ← 3 ← [÷6] ← 18
a=6

2). $3 - \frac{x}{2} = 1$

x → [÷2] → x/2 → [3 இலிருந்து கழி] → 3 - x/2 → 1
4 ← [x2] ← 2 ← [3இலிருந்து கழி] ← 1

x=4

3). $\frac{6}{x} - 1 = 2$

x → [6ஐ வகு] → 6/x → [-1] → $\frac{6}{x}-1$
2 ← [6ஐ வகு] ← 3 ← [+1] ← 2

x=2

**பயிற்சிகள்**

1. $\frac{2x-1}{5} = 3$
2. $\frac{x}{2} \; \frac{x}{3}+1$
3. 3x+4 =2(x+2)
4. 2(m-4) =10
5. $\frac{8}{1-x} =3$
6. 3(5-2x) = 3
7. $7-\frac{6}{a} = 5$
8. $4(\frac{n}{2}-7) = -32$

(தொடரும்)

வே. தவராஜா
மட்/புனித மிக்கேல் கல்லூரி

# மாதிரி வினாத்தாள் பகுதி – I

## (விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்)

கே.பாஸ்கரன்
களுதாவளை ம.வி.
களுதாவளை

1. வெப்பப்பிரிகை அடையும் முதலாம் கூட்ட காபனேற்று எது?
1). $Na_2CO_3$ 2). $Li_2CO_3$
3). $K_2CO_3$ 4). $Pb_2CO_3$

2. ஒட்சிசனில் ஊதா நிறச் சுவாலையுடன் எரிவது?
1). Na 2) Zn 3) K 4) Mg

3. அலசன்கள் என அழைக்கப்படுவன கீழ் வரும் எக் கூட்ட மூலகங்கள்?
1). 1ம் கூட்டம் 2). 2ம் கூட்டம்
3). 8ம் கூட்டம் 4) 7ம் கூட்டம்

4. கீழ்வருவனவற்றில் அறை வெப்ப நிலையின் திரவமாக உள்ளது
1) புரோமின் 2) புளோரின்
3) அயடின் 4) குளோரின்

5. குறை கடத்தி குடும்பம் என அழைக்கப்படும் கூட்டம்
1) 1ம் கூட்டம் 2) 4ம் கூட்டம்
3) 8ம் கூட்டம் 4) 5ம் கூட்டம்

6. விவேகம், ஞாபக சக்திக்கு பொறுப்பான பகுதி
1) மூளி
2) நீள் வளைய மைய விளையம்
3) செயற்கை மையம்
4) நடுமூளை

7. காதில் செவி நரம்புடன் தொடுக்கப்பட்ட ஒலி வாங்கிகளை கொண்ட பகுதி
1) செவிப்பறை 2) ஏந்தியுரு என்பு
3) புறச்செவிக்கால்வாய்
4) நத்தைச்சுருள்

8. காதின் ஒலி உணர்ச்சிக்குரிய பகுதியாக காணப்படுவது
1) கோட்டின் அங்கம்
2) செவிநரம்பு
3) செவிப்பறை
4) நடுக்காது

9. எமது கண்ணில் ஒளி புகவிடும் பகுதி அல்லாதது
1) கண்மணி 2) ஐரிசு
3) வில்லை
4) நீர்மயவுட நீர்

10. விழித்திரையின் மத்தியிலும், ஓரங்களிலும் முறையே அதிகமாக இருப்பன
1) கூம்புகள் , கூம்புகள்
2) கோல்கள், கோல்கள்
3) கூம்புகள், கோல்கள்
4) கோல்கள், கூம்புகள்

11. தூரத்தில் வெளிச்சத்தைப் பார்த்த ஒருவர் கிட்டடியில் இருட்டறையைப் பார்த்தால் கண்ணில் மாற்றமடையும் பகுதிகள்
1) கண்வில்லை, விழிவெண்படலம்
2) விழிவெண்படலம், கதிராளி
3) கண்வில்லை, கதிராளி.
4) கதிராளி, பிணிக்சை

12. கீழ்வருவனவற்றில் ஓமோன் அல்லாதது
1) அதிரினலின் 2) தைரொட்சின்
3) இன்சுலின் 4) தயலின்

13. தாவர ஓமோன்கள் கீழ்வருமாறு அழைக்கப்படும்
1) தயலின் 2) இன்சுலின்
3) ஒட்சிசன் 4) அதிரினலின்

14. எமது குருதியில் இருக்க வேண்டிய குளுக்கோசின் அளவு
1) 0.9% 2) 0.09%
3) 0.009% 4) 9%

15. எமது நாவில் இனிப்பை நன்றாக உணரும் வாங்கிகளை கொண்ட பகுதி
1) அடிப்பகுதி 2) நுனிப்பகுதி
3) நுனியும் ஓரங்களும்
4) ஓரங்கள் மட்டும்

16. கீழ்வருவனவற்றில் வெப்பமாக்கப் பிரிகையடையும் ஒட்சைட்டு எது
1) ZnO 2) MgO 3) CaO
4) $Ag_2O$

17. ஒலியின் இயல்புகள் பின்வருவனவற்றுள் எது
1) அதிர்வெண்ணும் சுருதியும்
2) சுருதி, உரப்பு, பண்பு
3) சுருதியும் உரப்பும்
4) அதிர்வெண்ணும் உரப்பும்

18. சுண்ணாம்புக் கல்லில் உள்ள பிரதான கூறின் இரசாயன சூத்திரம்
1) $CaCO_3$ 2) $CaCl_2$
3) $Ca(HCO_3)_2$ 4) $CaSO_4$

19. உயிர் வாயு என்பது
1) மெதென்
2) பெற்றோலிய வாயு
3) ஒட்சிசன்
4) அற்ககோல் ஆவி

20. கீழ்வருவனவற்றில் ஒலியைக் கடத்தாதது எது?
1) திண்மம் 2) திரவம்
3) வாயு 4) வெற்றிடம்

21. கீழ்வருவனவற்றில் முதல் நிறங்களைக் கொண்ட கூட்டம்
1) சிவப்பு, ஊதா, நீலம்
2) நீலம், பச்சை, சிவப்பு
3) நீலம், பச்சை, மஞ்சள்
4) சிவப்பு, ஊதா, பச்சை

22. கீழ்வருவனவற்றில் வளிமண்டலத்தில் ஒட்சிசனை அதிகரிக்க உதவும் செயல் முறை
1) தாவரச் சுவாசம்
2) விலங்குச்சுவாசம்
3) ஒளித்தொகுப்பு
4) உலோகம் ஒட்சைட்டாதல்

23. பின்வருவனவற்றில் அயனாக்கல் சக்தி கூடிய மூலகம் எது?
1) Na 2) He 3) Ne 4) Ar

24. குருதித் திரவ விழையத்தில் எத்தனை வீதம் நீர் உண்டு
1) 99% 2) 55% 3) 92%
4) 75%

25. காற்றின்றிய சுவாசத்தின் போது மதுவத்தில் சுவாசத் தொழிற்பாட்டினால் உண்டாவது
1) அற்ககோல், காபனீரொட்சைட்டு
2) காபனீரொட்சைட்டு, நீர்
3) அற்ககோல், நீர்
4) நீர், காபனீரொட்சைட்டு

26. ஒரு ATP மூலக் கூறு பிரிகையடையும் போது பெறப்படுவது
1) ADP, ATP சக்தி
2) ATP, பொஸ்பேற்று, சக்தி
3) ADP, சக்தி
4) ADP

27. பின்வருவனவற்றில் எதில் மின்காந்தம் பயன்படுத்தப்படுவதில்லை
1) மின்மணி
2) செவிப்பன்னி
3) திசைகாட்டி 4) பதிவுத்தலை (Recording Head

28. ஒரு மெகா வாற்றுக்கு சமன்
1) 1000w 2) 100kw
3) 1000kw 4) 10,000kw

29. வானொலி அலையின் மீடிறனை அளக்கும் அலகு யாது?
1) வோல்ட் 2) அம்பியர்
3) ஹேர்ட்ஸ் 4) செல்சியஸ்

30. பின்வருவனவற்றில் தொனி இயல்பு எது?
1) சுருதி 2) பண்பு 3) உரப்பு
4) வீச்சம்

(தொடரும்)

# பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர் பரிசளிப்பு விழா

(களுவாஞ்சிகுடி நிருபர்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழா கடந்த 18ம் திகதி கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் எஸ்.சாந்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த களுவாஞ்சிகுடி பாடசாலை மாணவர்களுக்கும், க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து "10டீ" சித்தி பெற்ற மாணவி நவேந்திரன் பிரசாந்தினிக்கும் பரிசில்கள், பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்பட்டது.

தலைவர் சத்தியகுமார் தனது உரையில் "இது போன்ற நிகழ்ச்சிகள் அவசியமா?" எனப் பலர் விமர்சிக்கின்றனர். இது ஒரு ஊக்குவிப்பே என்றார்.

அதிபர் தனதுரையில், மாணவர்கள் கடந்த ஆண்டுகளை விட கூடிய அளவு சித்திகளைப் பெற்று இருக்கின்றனர். இதற்குக் காரணம் ஆசிரியர்களும், நாகேந்திரனின் அயராத முயற்சியுமே என்றார்.

வைத்திய கலாநிதி யோகராஜா தனதுரையில், "நான் எங்கெங்கு புலமைப் பரிசில் கற்பிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் சென்று உற்றுநோக்குவது வழக்கம். சில ஆசிரியர்கள் மட்டும் தங்கள் பிற வேலைகளை கவனிக்காது அயராது கற்பிக்கின்றனர். அதற்கு ஓர் உதாரணமே ஆசிரியை மகேஸ்வரி நவேந்திரன் என்றார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் கே.இராசநாயகம், பிரதேச செயலாளர் பாஸ்கரன் கிராம சேவையாளர் மன்றச் செயலாளர் சண்முகலிங்கம், பொறியியலாளர் உருத்திரன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கமநல சேவைகள் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு பாராட்டு

(வேதாந்தி)

மட்டக்களப்பு மாவட்டம் யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதனால் விவசாய நடவடிக்கைகளும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்படியான சிக்கலான நிலையிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கமநல சேவைகள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் மிகவும், பாராட்டப்படக்கூடிய வகையில் இடம் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. மிகவும் பெருமைப்படக்கூடிய விடயமாகும். இத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர், பெரும்பாக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் மிகவும் அர்ப்பணிப்புடனும், இதயசுத்தியுடனும், சுத்தமான கையுடனும் அயராது உழைப்பதனாலேயே இத் திணைக்களத்துக்கு இம் மாவட்டத்தில் மிகவும் கௌரவமான பெயரும் புகழும் கிடைத்துள்ளது.

மேற் கண்டவாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி மட்டக்களப்பு கமநல சேவைகள் மாவட்ட அலுவலக வளவிலுள்ள விவசாயிகள் பயிற்சி நிலையத்தில் 17.06.2001ம் திகதி நடைபெற்ற உலக உணவுத் திட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கமநல அமைப்புக்களின் முன்னோடி விவசாயிகளுக்கான பயிற்சிநெறியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார். இப் பயிற்சிநெறி மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் எஸ்.சாமித்தம்பி தலைமையில் இடம் பெற்றது. இதில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 50 கமநல அமைப்புக்களைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் மேலும் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு மக்களிமிருந்து முறைப்பாடு கிடைக்காத ஒரேயொரு திணைக்களம் கமநல சேவைகள் திணைக்களம் தான் என்பது பாராட்டப்படக்கூடியதாகும் எனக் கூறியதுடன், அதற்கான உதவி ஆணையாளர் மற்றும் ஏனைய கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோர் பாராட்டப்படக் கூடியவர்கள் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மட்டக்களப்பு விவசாயப் பெருமக்கள் விவசாயத் துறையில் கவனம் செலுத்துவதுடன் தங்கள் பிள்ளைகளின் படிப்பிலும் மிகக்கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும், இப்படியான பயிற்சிகளின் மூலம் பெறும் அறிவைக்கொண்டு தங்கள் விவசாய நடவடிக்கைகளை மாறிவரும் நவீன உலகத்துக்கேற்ப முன்னேற்றமான முறையில் செய்ய முயல வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இப்பயிற்சி நெறியை உதவி ஆணையாளர் எஸ்.சாமித்தம்பி, இணைப்புப் பெரும்பாக உத்தியோகத்தர் எம்.மகேஸ்வரன், சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.ஏரம்பமூர்த்தி ஆகியோர் நடாத்தினர்.

பயிற்சியின்போது விவசாயிகளுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட புதிய கருவிகள், தள்ளு வண்டிகள் என்பனவும் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டன.

# வரியிறுப்போர் சங்க பொதுக் கூட்டம்

(சந்துரு)

மட்டக்களப்பு மாநகர வரியிறுப்போர் சங்க பொதுக்கூட்டம் அண்மையில் புனித மிக்கேல் கல்லூரியில் தற்காலிக தலைவர் அன்ரன் மார்ட்டின் தலைமையில் நடைபெற்றது. இவ் ஆண்டுக்கான புதிய நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: காந்தியடியான்,
உபதலைவர்: ஜே.பீ.பெர்னான்டோ.
செயலாளர்: எஸ்.பீ.புவிராஜசிங்கம்,
உபசெயலாளர்: வீ.விஸ்வநாதன்.
உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.
எஸ்.சந்திரன், எஸ்.பரசுராமன், எஸ்.ராஜகுலேந்திரன் ஜே.ஜே.இராஜரெட்ணம், கே.ஜீவரெட்ணம், ஏ.மாட்டின், எஸ். பாஸ்கரன்.

பாலர் பாடசாலை ஆசிரியர்களுமான செல்வி எஸ். கபிலா, திருமதி தே.விஜயராணி ஆகியோர்கள் மேற்கொண்டிருந்தனர்.

# சமாதான அமைப்பின் ஆலோசனைக் கூட்டம்

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை சமாதான அமைப்பின் நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு கிராமமட்ட ஆலோசனைக் குழுவின் மாதாந்த கூட்டம் 2001.06.16ம் திகதி சனிக்கிழமை நற்பிட்டிமுனை கிராமமட்ட பாலர் பாடசாலை மண்டபத்தில் ஜனாப் எம்.ரி.ஏ.சத்தார் (ஆசிரியர்) தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தின் போது மீலாத் விழா கொண்டாட்டம், வீதி அபிவிருத்தங்கள் மேற்கொள்ளல், பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா போன்றன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இதில் நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு கிராம மட்ட குழு அங்கத்தவர்கள் உட்பட சமாதான அமைப்பின் பாலர் பாடசாலை இணைப்பாளர் தே.தட்சணாமூர்த்தி, நிருவாக உறுப்பினர் ரீ. வெள்ளையாப்போடி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இம்மாதாந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சமாதான அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தர்களும், நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு கிராம மட்ட

# வாகன விபத்து

(கல்லாறு நிருபர்)

அம்பாறை வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான பிக்கப் வாகனமொன்று, ஹபறன திருகோணமலை வீதியில் மரத்துடன் மோதியதால் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இதில் பிரயாணம் செய்த உயர்மட்ட உத்தியோகத்தர்கள் காயத்திற்குள்ளானதாக தெரியவருகிறது.

# நட்சத்திரப்பலன்

## 16

## விசாகம்

ஈன்றதாய் தந்தை பேணுமின்பமே தேடவல்ல
நீண்ட தத்துவத்தைப் பேணு நீதியுமுடையனாகு
மீண்டுரை யொன்றுஞ்சொல்லான் வெட்டெனப் பேசவல்லன்
வேண்டிய பேர்க்கு நல்லன் விசாக நாட்டோன்றினானே
(மரணகண்டி சாஸ்திரம்)

விசாக நட்சத்திரத்திற்குரியவர் குரு ஆவார். விசாகம் துலாராசியில் 20 முதல் 30 வரை மூன்று பாதங்களாக அமைந்திருப்பது. இந்த ராசி அதிபர் சுக்கிரன் ஆகிறார்.

விசாகத்தின் 4ம் பாதம் விருச்சிகத்தின் முதல் 3-20 பாகை வரை அமைவது. இதற்கு ராசியதிபன் செவ்வாய்.

முதல் மூன்று பாதங்களும் சுக்கிரன், சந்திரன், குரு செல்வாக்குப்பெற்று விளங்கும். நான்காவது பாதம் குரு, செவ்வாய், சந்திரன் ஆகியோரின் செல்வாக்குப் பெற்று விளங்குவர்.

இவர்கள் பெரும்பாலும் சொந்த முயற்சியில் தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்வார்கள் எனலாம்.

### பொதுவான குணங்கள்

இது குருவின் நட்சத்திரம். குருபகவானின் குணங்களை மிகுதியாகப் பெற்றிருப்பது.

இவர்களுக்கு பொறுமை குணம் சற்று அதிக மானதென்றும் கூறலாம். தங்களை காட்டிலும் எவரும் எதிலும் மேலாக இருப்பதைச் சகிக்க முடியாதவர்கள். 'தாங்களே உயர்ந்தவர்' என்பதை நினைப்பவர்கள், நடப்பவர்கள்.

தேககாந்தி உள்ளவர்கள். சில சமயங்களில் பெருந்தன்மை இல்லாமல் நடந்து கொள்ளவும் செய்வார்கள். ஆசையும் ஆத்திரமும் கண்களை மறைத்து விடும். பிரதிவாதங்களை எடுத்துப்பேசி உரையாடுவதில் இவர்கள் சமர்த்தர்கள். பிறர் கூறும் எவ்விடையத்துக்கும் அவர்களே திகைக்கும் படியாக மறுப்புச் சொல்லித்திறமை வைத்து விடுவார்கள். ஆனால் சுருக்கமாகவும் பேசுவார்கள்.

மற்றவர்களுக்கு இடையிலே கலகத்தை எழுப்பிவிட்டு அவர்கள் தமக்குள் மோதிக்கொள்வதைப் பார்த்து மகிழக் கூடியவர்கள். இவர்களுக்கு முன்கோபமும் அதிகம். இதனால் பலரின் வெறுப்புக்கும் உள்ளாவார்கள்.

தெய்வபக்தி மிகுதியானவர்கள். கோயில்களுக்கு தவறாமல் போய் வழிபட்டு வருவார்கள்.

நடந்த செயலை நினைத்து வேதனைப்படுவது குறைவு தான். எதையும் பெற்றி பெரிதாக மனதில் நினைத்துக் கவலைப்படவும் மாட்டார்கள்.

இவர்களின் நடையிலே ஒருவகை மிடுக்கைக் காணலாம். எதையோ கையில் வைத்துக்கொண்டு போவதுபோல் நடப்பதும் இவர்களின் தனித் தன்மையாகும். இவர்களுக்கு படித்தவர்களிடமும் செல்வர்களிடமும் பற்றுதல் அதிகம். இவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்வார்கள். ஏற்றுக்கொண்ட செயல்களைச் செய்யும் வல்லமை உடையவர்கள்.

சுற்றத்தார்களுக்கு உதவுகின்றவர்கள். நல்ல குணமும் ஒழுக்கமும் நிரம்பியவர்கள்.

பொருள் வசதியுள்ளவர்களாக உயர்ந்து விடுவார்கள். உடல் பலவீனமாகவே இருக்கும். பெண்களிடம் மயக்கம் மிகுதியானவர்கள். கண்கள் சிவந்து தோன்றும். முகம், வயிறு போன்ற இடங்களில் சிறு மச்சங்களே காணப்படும். விசாகத்துக்கு அக்கினியும், இந்திரனும் அதிதேவதைகள் என்பதால், இதை உக்கிரமான ஒரு நட்சத்திரமாகவே கொள்பவர்கள். பலர் 'இராட்சத கணம்' என்று இதை வகைப்படுத்துவர்.

சாப்பாட்டில் அதிகம் ஆசையுள்ளவர்கள் அதனால் வயிற்று நோய்க்கு அடிக்கடி உட்படுகின்றவர்கள். சாப்பாட்டில் கவனம் இருப்பின் இன் நோயில் இருந்து விடுபடலாம். இந்த நட்சத்திரத்தில் ருதுவாகும் பெண் சௌபாக்கியவதியாக விளங்குவாள். ஆனால் சாந்தி செய்து கொள்ளவேண்டியது அவசியம் என்று சில நூல்கள் கூறுகின்றன.

இது கீழ்நோக்கு நாள் என்பதால் பூமி தொடர்பான பல செயல்களுக்கு சிறப்பானது ஆகும்.

### நான்கு பாதங்கள்

முதற்பாதத்தில் பிறந்தவர்களுக்கு மேடச் செவ்வாய் அம்சநாதர் ஆவர். இவர்கள் செல்வம் மிகுந்தவர்கள். வசதியாக வாழ்பவர்கள். மனோதைரியமும், செயலூக்கமும் மிகுந்தவர்கள். பருத்த புயங்களும் விரிந்த மார்பும் பெற்றவர்கள். கோபம் அதிகமானவர்கள். கண்கள் சிவந்தவர்கள். போராட்ட குணம் உள்ளவர்கள்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ரிஷபச் சுக்கிரன் அம்சநாதன் ஆகின்றார். இவர்கள் சுகபோக வாழ்வை அனுபவிக்கும் யோகம் பெற்றவர்கள்.

செல்வ வசதியும் குறைவில்லாமல் அமையும். நியாயமாகவே பொருள் தேடி நிம்மதியாகவே வாழ்பவர்கள். அழகானவளும் குணமுள்ளவளுமான மனைவியுடன் ஆனந்தமாக குடும்ப சுகமும் அமையப்பெறுபவர்கள் எனலாம். இவர்களுக்கு காது நோய்கள்வந்து தொல்லைகள் தரலாம்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு மிதுன புதன் அம்சநாதர் ஆவார். இவர்கள் அழகான தோற்றம் பெற்றவர்கள். படிப்பறிவு மிகுந்தவர்களாகவும், எதிலும் நிபுணர்களாகவும் விளங்குவார்கள். செல்வ வசதியும் உண்டு. தான தருமங்களிலும் ஈடுபாடு இருக்கும். பேச்சுத் திறமையும் அதிகமானவர்கள். சிலருக்கு கண்நோய்களின் தொல்லைகள் அடிக்கடி ஏற்படக் கூடும். கணிதம் போன்ற துறைகளில் சிறந்த பணிகளைச் செய்து புகழ்பெறக் கூடியவர்கள்.

நான்காம் பாதத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரன் அம்சநாதன் ஆவர். இவர்களுக்கு பொருள் வசதியிலே குறை இருக்காது. அதைச் சிக்கனமாக எண்ணிச் செலவு செய்வதற்கும் தெரிந்தவர்கள். குடும்பத்தில் பாசம் அதிகம். உற்றார் உறவினர்களுக்கும் உதவுவார்கள். சிலர் முதுமையிலே நோய்ப்பட்டும் தொல்லை படக் கூடும்.

### பெண்கள் பற்றிய செய்திகள்

இவர்கள் விரதங்களைக் கடைப்பிடிப்பவர்கள். தர்மங்களில் விருப்பமானவர்கள். பந்து ஜனங்களிடம் பாசம் மிகுந்தவர்கள். அழகான உடலும் நல்ல குணங்களும் பெற்றவர்கள் பேச்சிலும் இனிமை வெளிப்பட்டு பிறரை வசீகரிக்கும்.

இவர்களை நாகதத்துவப் பெண்கள் என்பார்கள். இவர்கள் உயரமாகவும் தசைப்பற்றுடனும். அழகாக விளங்குவார்கள். சுதந்திரமான மனப்போக்கு அதிகமானவர்கள். தாராளமான போக்குக் காணப்படும். எதிலும் எவரிடமும் மிகுதியான பற்றும் பாசமும் இல்லாதவர்கள். இவர்கள் சுபாவங்களைத் தெரிந்து நடக்கும் கணவன் வாய்த்தால் நிம்மதியாக வாழ்வார்கள்.

### சிறப்புச் செய்திகள்

விசாக நட்சத்திரக்காரர்கள் பதுங்கிப் பாயும் புலியைப் போன்ற குணம் பெற்றவர்கள் என்றும் சொல்வார்கள். தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவதில் தீவிர மானவர்கள் என்பது கருத்து.

விளாமரம் இவர்கள் ராசியானது. விளாங்கனிகளை விநாயகருக்குப் படைத்து வழிபடுவதும் நன்மைகளை அதிகப்படுத்தும். 33 ஆவது வயதில் தொல்லை ஏற்பட்டு நீங்கும். பின்னர் எழுபது வயதுக்கு மேல் ஆயுள் நீடிக்கும்.

### பெயர் அமைப்புகள்

விசாகத்துக்கு உரிய எழுத்துக்கள் தீ-து-தே-தோ ஆகும். இந்த எழுத்து ஒலிகளுள்ள பெயர்கள் நன்மையை மிகுதிப்படுத்தும்.

### விசாகம்

மிகுந்த செல்வம் படைத்தவர்கள் திறமைசாலிகள். பேச்சில் வல்லவர்கள் தயாள சிந்தை கொண்டவர்கள். கடினமான காரியங்களையும் சாதிக்க வல்லவர்கள். சங்கீதப் பிரியர்கள். சாத்திரங்களில் விருப்பமுள்ளவர்கள். சிலர் அழகாக இருப்பார்கள் நடத்தை திருப்திகரமாக இருக்காது. ஆனால், எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றிருப்பார்.

வே.தவராசா
சோதிடர்
குருக்கள்மடம்.

# விளையாட்டுச் செய்திகள்

# பட்மின்ரன் (Badminton)

**(நேற்றையத் தொடர்ச்சி.....)**


(தொகுப்பு:- ச.பிரகாஸ்)

**1934ம்** ஆண்டு சர்வதேச பட்மின்ரன் சம்மேளனம் உருவாக்கப்பட்டது. இவ்வேளை ஒன்பது நாடுகள் அங்கம் வகித்தன. 1944ம் ஆண்டு நடாத்தப்பட்ட 'சர்வதேச பட்மின்ரன் போட்டியின் பின்பு விளையாட்டின் மகிமை பரவியது. இதனால் 1954ல் 30 நாடுகள் அங்கத்துவம் பெற்றன. சர்வதேச பட்மின்ரன் சங்கம் ஆண்களுக்கான போட்டியை நடாத்தியது. இந்த வெற்றிக் கிண்ணம் 'தோமஸ் வெற்றிக் கிண்ணம்' என அழைக்கப்படுகின்றது. இதனை இங்கிலாந்தில் வாழ்ந்த 'சேர் ஜோர்ஜ்' என்பவர் 'வழங்கியிருந்தார்.

பட்மின்ரன் விளையாட்டின் வளர்ச்சிக்கு அரும்பெரும் பணியாற்றிய இவருக்கு இங்கிலாந்து மன்னர் பல பட்டங்களையும், பதவிகளையும் வழங்கியிருந்தார். 1949ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது சர்வதேசப் போட்டியில் மலேசியா வெற்றி பெற்றது.

1956இல் பெண்களுக்கான சர்வதேச பட்மின்ரன் போட்டி இங்கிலாந்தில் முதன் முதல் நடா[illegible] 'ஊபர் வெற்றிக் கிண்ணம் என இது அழைக்கப்பட்டது. [illegible] என்ற பெண்மணியால் இக் கிண்ணம் வழங்கப்பட்டது. முத[illegible] போட்டியில் அமெரிக்கா [illegible] 1966ம் ஆண்டின் பின்பு ஆசிய நாடுகள் பல வெற்றிகளைச் சுவீகரித்துக் கொண்டன.

இலங்கையில் பட்மின்ரன் விளையாட்டை அறிமுகம் தமிழர்களினாலே செய்யப்பட்டது. என்ற உண்மை இன்னும் நூல்களில் காணப்படுவது மகிழ்வைத் தருகின்றது. "1946ம் ஆண்டு மலேசியாவில் கல்விகற்று வந்த இலங்கையின் வட பிரதேசத்தைச் சேர்ந்த தமிழர்கள் சிலர் மூலம் இவ்விளையாட்டு அறிமுகம் செய்யப்பட்டது" என எழுதப்பட்டுள்ளது. இந்தப் பெருமைக்குரியவர்கள் திருவாளர்கள்




ரி.பி.சிவலிங்கம், ஏ.வைத்தியலிங்கம், கே.செல்லத்துரை, ஏ.சி.ஜோன் ஆகியோரை முதன்மையாகக் குறிப்பிடலாம். ஆரம்பத்தில் வெள்ளவத்தை கத்தோலிக்க இளைஞர் சங்கத்தில் அறிமுகம் செய்யப்பட்ட இவ்விளையாட்டு கொழும்பு,கண்டி, காலி, அம்பலாங்கொடை, பத்தேகம, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குப் பரவியது. கொழும்பிற்கு வெளியே பாடசாலைகள் மட்டத்திலே பரவ, அம்பலாங்கொடை தர்மானந்தா பாடசாலையைச் சேர்ந்த ஆரியதாச சில்வா பெரும் பங்காற்றினார். இவரின் ஞாபகார்த்தமாகப் போட்டிகளும் நடாத்தப்பட்டன.

1946ம் ஆண்டு தேசிய பட்மின்ரன் சங்கம் உருவாக்கப்பட்டது. சங்கத்தின் முதற் தலைவராக சீ.எம்.பொலிம்ஸ் என்பவரும், முதலாவது செயலாளராக ரீ.பி.முத்துலிங்கமும் தெரிவாகினார். இவர்களால் நடாத்தப்பட்ட முதலாவது தேசியமட்ட தனி, சோடி, கலப்புப் போட்டிகள் யாவற்றிலும் பி.சிவலிங்கம் வெற்றி பெற்றார்.

1947ம் ஆண்ட முதன் முதலாக வெளிநாடு ஒன்றுடன் இலங்கை அணி மோதியது. இதில் இந்தியா வெற்றி பெற்றது. 1948ல் மலேசியாவுடன் விளையாடி இலங்கை தோல்வி அடைந்த போதிலும் மலேசியா அணித் தலைவர் ஏ. எஸ்.சாமுவேல் அவர்களை எமது அணித் தலைவர் பி.சிவலிங்கம் வெற்றி கொண்டார். இதைத் தொடர்ந்து ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் பட்மின்ரன் சங்கம் பல காரணங்களினால் துடிப்பற்றுக் காணப்பட்டது. 1952ல் புத்துயிர் அளிக்கப்பட்டு அகில இலங்கை பட்மின்ரன் சங்கம் உருவாக்கப்பட்டது. இதன் தலைவர், செயலாளராக முறையே எம்.சி.சில்வாவும், பீ.டீ.சில்வாவும் தெரிவு செய்யப்பட்டனர். 1953ல் அகில இலங்கை பட்மின்ரன் சங்கம் தேசிய மட்டத்தில் பட்மின்ரன் நிரற்போட்டி ஒன்றினை நடாத்தியது. இதில் வெற்றி பெற்றவரும் பி.சிவலிங்கமே. தற்போது கழக மட்டம், பாடசாலை மட்டம் என பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. பாடசாலை பாட விதானத்தில் உடற்கல்விப் பாடத்திட்டத்தில் பட்மின்ரன் விளையாட்டு தெரிவுக்குரிய ஒரு விளையாட்டாக' இடம் பெற்றுள்ளது.

# சம்பியன் பட்டத்தை வென்றுள்ள என்.ஸி.ஸி.கழகம்

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடாத்திய 2000.01ஆம் ஆண்டுக்கான கழகங்களுக்கிடையிலான பிரிவு ஒன்றுக்கான பிறிமியர் சுப்பர் லீக் சம்பியனாக என்.ஸி.ஸி கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணிக் கழகங்கள் பலவற்றை வெற்றி கொண்டதன் மூலம் சம்பியனாகியுள்ள என்.ஸி.ஸி.கடைசியாக 1993-94 காலப்பகுதியில் நடைபெற்ற பிறிமியர் லீக் பி.சரவணமுத்து வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியிருந்தது.

அதற்குப் பிறகு இப்போதுதான் சம்பியனாகியிருக்கின்றார்கள். பல முன்னணி வீரர்களைக் கொண்டுள்ள என்.ஸி.ஸி இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னால் வேகப்பந்து வீச்சாளர் ருமேஸ் ரத்நாயக்கவை பயிற்சியாளராகக் கொண்டிருக்கிறது.

1993ம் ஆண்டு பயிற்சியாளராக இணைந்து கொண்ட ருமேஸ் ரத்நாயக்க என்.ஸி.ஸி இன்று சம்பியனாவதற்கும் பல வீரர்கள் தேசிய அணியில் இடம் பெறவும் ஒரு காரண கர்த்தாவாகவும் இருந்து வருகின்றார்.

புளூம் பீல்ட் மைதானத்தில் நடைபெற்ற சுப்பர் லீக் சுற்றின் கடைசிப் போட்டியில் ஸி.ஸி.ஸி அணியை மூன்று விக்கட் வித்தியாசத்தில் வெற்றி கொண்டதன்

**எஸ்.எம்.அறூஸ்**
**அட்டாளைச்சேனை**

மூலம் சம்பியனாகியுள்ள என்.ஸி.ஸி அணி ஒரு கட்டத்தில் தோல்வியடையக்கூடிய நிலையில் இருந்ததோடு முதல் இன்னிங்ஸில் ஸி.ஸி.ஸி. கூடுதலான ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால் ருவான் கல்பகேயின் சிறந்த பந்து வீச்சும், துடுப்பாட்டமும் நவீட் நாவாசின் நிலையான அதிரடித் துடுப்பாட்டமும் தோல்வியிலிருந்து மீட்டெடுத்து சம்பியனாக்கியிருக்கின்றார்கள். பல வருடங்களாக என்.ஸி.ஸி அணியின் தலைவராக இருந்துவரும் இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர் ஹசான் திலகரத்ன இச்சுற்றுப் போட்டியில் மிகச் சிறப்பாக விளையாடி தனது அணியை சம்பியன் ஸ்தானத்திற்கு உயர்த்தியிருக்கின்றார்.

(தொடரும்.....)

## சின்னப் பாலமுனையில் சாரணர் குழு

(முபா)

**சி**ன்னப்பாலமுனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் கடந்த சனிக்கிழமை சாரணர் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அதிபர் எம்.எம்.சுபைர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி மாவட்ட சாரணிய ஆணையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா, சாரணிய ஆசிரியர்களான எம்.எச்.எம்.ஹாசிம் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

வைபவத்தையடுத்து சாரணர்களுக்கான பயிற்சிகள் இடம் பெற்றன.

## சாரணர்களுக்கான மருத்துவப் பாசறை

(முபா)

**க**ல்முனை, அக்கரைப்பற்று பிரதேச சாரணர்களுக்கான இலவச மருத்துவப் பாசறை ஒன்று கல்முனையில் எதிர்வரும் செப்டம்பரில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

டாக்டர் அப்துல் அக்பர் பின் ஹலால்தீன் தலைமையிலான மருத்துவக் குழு இப் பாசறையை நடாத்தி சாரணர்களுக்கு உதவ முன் வந்துள்ளன.

இதற்கான ஒழுங்குகளை விரிவுரையாளரும், உதவி மாவட்ட சாரணிய ஆணையாளருமான எம்.ஐ.எம்.முஸ்தபா செய்துள்ளார்.

# வாசகர் நெஞ்சம்

## முடிவுகள் வெளியிடப்படாத பரீட்சை

**வெ**ளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் எழுதுனர் பதவிகளை நிரப்புவதற்காக கடந்த மே மாதம் 5ம்,6ம் திகதிகளில் கொழும்பில் நடாத்தப்பட்ட பரீட்சை தொடர்பாக இப் பரீட்சைக்கு எழுதிய பரீட்சாத்தியொருவர் பின்வரும் தகவல் தெரிவித்தார்.

இப் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட பரீட்சைக்கால அட்டவணையில் குறிக்கப்பட்டிருந்த பாடங்களை விட வித்தியாசமான பாடங்களில் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் பரீட்சாத்திகள் மிகுந்த குழப்பத்திற்குள்ளாகினார்கள் எனவும் தெரிவித்தார். இது போன்ற பரீட்சைகளுக்காக வருடாந்தம் அரச வர்த்தமானியில் விண்ணப்பம் கோரப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சை நடாத்தப்பட்ட போதிலும், பரீட்சை முடிவுகள் வெளியிடப்படவில்லை. இது மிகவும் மன வருத்தத்துக்குரிய விடயமாகவுள்ளது.

பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாது இந் நியமனங்கள் வழங்கப்படுவதும், மேலும் இந் நியமனங்களில் தொடர்ந்து பல வருடங்களாக தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் பரீட்சாத்திகள் புறக்கணிக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்படுவதும் ஒரு வெளிப்படையான உண்மையாகும். இது தொடர்பாக பல அரசியல் பிரமுகர்களுக்கும், அமைச்சர்களுக்கும் அறிவிக்கப்பட்டும் இன்னும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் மனவருத்தத்துடன் தெரிவித்தார்.

**ஐ.எல்.ஜலீல்**
**அம்பாறை**

## தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் இதற்கு என்ன சொல்வார்?

18-06-2001 திங்கட்கிழமை தினக்கதிரின் "வாசகர் நெஞ்சம்" பகுதியில் "உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு" என்னும் தலைப்பில் மட்டக்களப்பு தொழிநுட்பக் கல்லூரி அதிபர் எம்.குணரெட்ணம் மறுப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் அவர், "இக் கல்லூரியில் அரசாங்க சட்ட திட்டங்களுக்கு ஏற்ற முறையிலேயே கல்வி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன" எனத் தெரிவித்ததையிட்டு, பின்வரும் விடயம் தொடர்பாக அவர் என்ன சொல்லுகிறார் என்பது பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் எனத் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

அதிபர் குறிப்பிடும் "அரசாங்க சட்டதிட்ட" படி ஒரு உயர்கல்வி நிறுவனத்தில் உள்வாரியாகப் பதிவு செய்த மாணவர் இன்னொரு அரச உயர் கல்வி நிறுவனத்தில் உள்வாரி மாணவராகப் பதிவு செய்யப்படுவது சட்டத்தை மீறும் செயலாகும்.

ஆனால் மட்டக்களப்பு தொழிநுட்பக் கல்லூரியில் குறிப்பாக "உயர் தேசிய கணக்கீட்டு டிப்ளோமா" **(H.N.D.A)** கற்கை நெறிக்கு குறிப்பாகக் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பரந்தளவில் அனுமதிக்கப்பட்டு வருகின்றமையிட்டு அதிபர் யாது சொல்கிறார்? விரிவுரையாளர் தியாகராசாவின் கைதைத் தொடர்ந்து அதிக அதிகாரம் பெற்ற ஆசிரியை ("செல்வி" எனும் சமூக அந்தஸ்து கொண்டவர்") கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களைப் பெருவாரியாக இக் கற்கைக்கு உள்ளீர்த்தமையாகவும், இவ்வருட கற்கைக்கான நேர்முகத் தேர்வில் சிரேஷ்ட குறிப்பிட்ட கற்கை மாணவர்கள் நேரடியாக பிரசன்னமாகி அனுமதியில் செல்வாக்கு செலுத்தியதாகவும் பிற மாணவ மாணவிகள் குறைபட்டுக் கொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக நிருவாகம் தனது மாணவர்களின் குறிப்பாக வர்த்தக முகாமைத்துவப் பீட மாணவர்களின் இச்சட்ட மீறலைக் கண்டும் காணாதுமிருக்கிறது. அவர்களது விரிவுரையாளர்கள் பலரும் இங்கு பணியாற்றுவது இதற்குக் காரணமாக இருக்கலாம் என மாணவ, மாணவியர் விசனம் தெரிவிக்கின்றனர்.

**எம்.எஸ்.சத்யா நாவற்குடா**

## ஆஸ்பத்திரி இருந்தும் மூடிக் கிடப்பதால் பயனில்லை!

**கோ**மாரியிலுள்ள ஆஸ்பத்திரி மருந்துகளின்மையால் மூடப்பட்டிருப்பதாக கோமாரி மக்கள் முறைப்பிடுகின்றனர். பொத்துவில் - திருக்கோவில் பிரதான வீதியில் 11 மைல் தூரத்தற்குள்ள ஒரேயொரு ஆஸ்பத்திரி கோமாரி ஆஸ்பத்திரி ஆகும்.

இவ்வாண்டின் முதல் பகுதிக்குரிய மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்களும் கூட இன்னும் வழங்கப்படவில்லை.

இதனால் சிட்டை எழுதுவதற்குக் காகிதமும், மருந்துகட்ட துண்டுச் சீலைகளும் நோயாளிகள் கொண்டு போக நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

வாரமொன்றுக்கு மூன்று தடவை வரவேண்டிய டாக்டர் மாதத்திற்கு ஒரு தடவை வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு கட்டப்பட்ட வைத்திய விடுதி அரைகுறையாகவுள்ளது. உலக தரிசன நிறுவனம் சில உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவசியமாக நிரந்தர டாக்டர் ஒருவரும், அம்புலன்ஸ் ஒன்றும் இல்லாவிடில் ஆஸ்பத்திரி மூடப்பட்டதற்கு ஒப்பானதாகும் என்று நலன்புரி அமைப்பு கூறுகிறது. இதனால் அங்கு அவசியமில்லாத மரணங்கள் இடம் பெறுவதாகவும் கூறப்படுகிறது.

**ராஜா**
**காரைதீவு**

# பிரதம நீதியரசருக்கு எதிரான மனு உயர்நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(கொழும்பு)

**பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.**

ராவய ஆசிரியர் விக்டர் ஐவன், சட்டத்தரணி ராஜ்பால் அபய நாயக்க, டபிள்யூ பி.ஏ.ஜய சேகர ஆகியோர் பிரதம நீதியரசருக்கு எதிரான வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர்.

பிரதம நீதியரசரை ஜனாதிபதியவர்கள் நியமித்து இருப்பதால் அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய முடியாது எனக் கோரியும் இவ்வழக்கினை நிராகரித்து விடுமாறும் பாராளுமன்றம் மாத்திரமே உயர்நீதிமன்ற நீதியரசரை விசாரிக்கும் உரிமையை பெற்றுள்ளதாகவும் சட்டமாஅதிபர் உயர் நீதிமன்றத்திற்கும் கேட்டிருந்தார்.

இது தொடர்பாக ஆராய்ந்த நீதியரசர்களான எஸ்.டபிள்யூ. எஸ்.வடுகொடப்பிட்டிய, பிரியந்தப் பெரேரா, சிராணிப் பண்டாரநாயக்கா, அமீர் இஸ்மாயில் ஆகியோர் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

## அரசுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் –பேரியல் தெரிவிப்பு

(நமது நிருபர்)

அமைச்சர் பேரியல் அஷ்ரப் உட்பட நான்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தொடர்ந்து அரசுக்கு ஆதரவு வழங்கப்போவதாக அமைச்சர் பேரியல் அஷரப் தெரிவித்துள்ளார்.

ரவூப் ஹக்கீம் உட்பட 7 ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் அரசுக்கான ஆதரவினை விலக்கிக் கொண்டு எதிர்க்கட்சி வரிசையில் சென்று அமர்ந்ததைத் தொடர்ந்து கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான யூ.எல்.எம். முகைதீன், விமலவீரதிஸநாயக்க, யூ.எல்.எம். கனிபா ஆகியோரே அரசுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## திருகோணமலை......

(ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் தொடர்பாடலும் வணிகமும், பிரயோக விஞ்ஞானம் என இரண்டு பீடங்கள் ஆரம்பத்தில் இயங்கத் தொடங்கும் எனவும்,

தொடர்பாடலும் வணிகமும் பீடத்தின் கீழ், மொழியும் தொடர்பாடலும் வணிக முகாமைத்துவம் எனும் இரு துறைகளும், பிரயோக விஞ்ஞான பீடத்தின் கீழ். பௌதிக விஞ்ஞானம் , கணனி விஞ்ஞானம் ஆகிய இரு துறைகளும் இயங்கும் எனவும் தகவலறிந்த வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

திருமலை வளாகத்தை, கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக விடுவிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது

## ஹிஸ்புல்லாஹ் பதவி துறப்பு

(நமது நிருபர்)

ஜனாதிபதியினால் ரவூப் ஹக்கீம் பதவி நீக்கப்பட்டதனைத் தொடர்ந்து முன்னாள் பிரதியமைச்சர் எம்.ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ், தாம் வகித்து வந்த நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கட்சியின் நலனுக்காகவே தாம் இப்பதவியை துறந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர்......

(ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசனங்களில் இருந்து எதிர்கட்சி ஆசனங்களில் சென்று அமர்ந்த போது எதிர்கட்சிப் பிரதிநிதிகள் கைகள் கொட்டி கரகோஷம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ரவூப் கருத்து தெரிவிக்கையில் எதுவித முன்னறிவித்தலுமின்றி தாம் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும்

**தனியான குழுவாக இயங்கும்**

இனிமேல் பாராளுமன்றத்தில் தனியான ஒரு குழுவாக செயற்படுவதற்கு தாம் தீர்மானம் எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் கொண்டுவரும் தீர்மானங்களுக்கு ஏற்ப அப்போதைக்கப்போதே தீர்மானங்கள் மேற்கொள்ளப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரான யூ.எல்.எம்.முகைதீன் அரசாங்க தரப்பு ஆசனத்திலே அமர்ந்திருந்தார்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் பாராளுமன்ற உறுப்பினர்களான விமலவீரதிஸநாயக்க, யூ.எல்.எம்.கனிபா ஆகியோர் பாராளுமன்றத்துக்கு சமூகம் கொடுக்கவில்லை.

## தாதியர் பாடசாலை அதிபர் நியமனம் தொடர்பாக விசனம்

(தவம்)

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு பெரும்பான்மையின அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது. கடந்த 19 வருடங்களாக தமிழர் ஒருவரே இப்பாடசாலையின் அதிபராக இருந்து வந்த நிலை இதனால் மீறப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த தாதியர் பயிற்சிப் பாடசாலையின் அதிபராக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.டி.பி. அலுவலகப் பொறுப்பாளர் பரணிதரன் பிரதியனுக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோடு தொடர்பு கொண்டுள்ளார்.

## மட்டு ஆசிரியர் கலாசாலையில் பகிடிவதை

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அதிபரின் எச்சரிக்கையையும் மீறி பகிடிவதை தொடர்வதாக பாதிக்கப்பட்ட ஆசிரிய மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு தூசன வார்த்தைகளைப் பிரயோகித்து கண்டபடி திட்டியது மட்டுமல்லாமல் மாணவர்களுக்கு ஒரு பக்க மீசையை வழித்தல், தலையில் தேங்காய் எண்ணெயை ஊற்றுதல் போன்ற கைங்கரியங்களில் ஈடுபட்டதாகவும் ஆசிரிய மாணவர் கவலை தெரிவிக்கின்றனர்.

அது மட்டுமல்லாமல் வயதில் மூத்த ஆசிரியை ஒருவருக்கு தூசன வார்த்தைகளை பிரயோகித்து திட்டியதாகவும் மாணவர்கள் தினக்கதிருக்குத் தெரிவித்தனர்.

இவ்விடயம் பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் ஈ.பி.டி.அலுவலகப் பொறுப்பாளர் பரணிதரன் பிரதிபனிடம் மாணவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதீபன் தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

## போட்டிப் பரீட்சை தொடர்பாக டக்ளசுக்கு கோரிக்கை

(தவம்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் இலங்கை நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்பும் முகமாக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில், மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றுவோர் இரு தடவைக்கு மேல் தோற்ற முடியாது என விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை நீக்குமாறு அரசாங்க உத்தியோகத்தர்கள் கோரியுள்ளனர்.

வழக்கமாக ஒருவர் ஏழு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றலாம் என்ற நடைமுறை உள்ளது. ஆனால் இம்முறை அந்த நடைமுறை மாற்றியமைக்கப்பட்டதால் பலர் பாதிக்கப்படும் நிலை உள்ளது.

ஏற்கனவே வடக்கு கிழக்கைச் சேர்ந்த பலர் மூன்று தடவைகளுக்கு மேல் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். எனவே, இரண்டு தடவைக்கு மேல் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாது" என்ற விதிமுறையை மாற்ற வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்மொழி தினப்போட்டிகள் அதிகாரிகள் அசமந்தம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு வலய தமிழ் மொழித் தினப் போட்டிகளை ஏற்பாடு செய்த அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் நாடகப் போட்டியில் பங்குபற்ற வேண்டிய ஒரு பாடசாலை தனது வாய்ப்பை இழந்துள்ளது.

ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் நாடகம் கோட்ட மட்டத்தில் தெரிவாகியிருந்தது. வலய மட்டப் போட்டி வெள்ளிக்கிழமை நடைபெறும் என அதிகாரி தெரிவித்திருந்தார். ஆனால் வியாழக்கிழமையே போட்டி ஏற்பாடாகியிருந்தது. இது தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதம் உரிய பாடசாலைக்கு வழங்கப்படாத நிலையில் நண்பகல் அளவில் கிடைத்த தொலைபேசி அழைப்பிலேயே போட்டி பற்றித் தெரிய வந்தது.

உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய பாடசாலை நிர்வாகம் போட்டி ஏற்பாட்டாளர்களிடம் மூன்று மணித்தியால அவகாசம் கோரியது. எனினும் அரை மணித்தியால அவகாசமே வழங்கப்பட்டது.

இந்தக் கால அவகாசத்தில் மட்டக்களப்பு ''பஸ்ஸில்'' செல்லவே முடியாது. மாணவர்களையும், உபகரணங்களையும் அழைத்துச் செல்வது எவ்வாறு? இந்நிலையில் இப்பாடசாலை போட்டியில் பங்குகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

போட்டி நடாத்தப்படுவது மாணவர்களுக்காகவா அன்றி அதிகாரிகளுக்காகவா எனக் குரல் எழுப்பியுள்ள பாதிக்கப்பட்ட மாணவர்கள் தற்போது போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

நியாயம் கோரி பிரசுரமொன்றை வெளியிட்டுள்ள மாணவர்கள் மாகாணக் கல்வியமைச்சுக்கும் முறைப்பாடு செய்துள்ளனர்.

## கிழக்குப்.........

(ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் பதாதைகள் தாங்கிய வண்ணம் தமது கோரிக்கையை வலியுறுத்தி அமர்ந்திருந்தனர்.

பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்யாதே, கைதான மாணவனை விடுதலை செய்! எமது மாணவனை விடுதலை செய் போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கியிருந்தனர். பகல் 12 மணி வரை அமர்ந்திருந்தபின் கலைந்து சென்றனர். எனினும் விரிவுரைகளில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை மேற்படி மாணவன் நேற்று பிற்பகல் வவுனியாவில் பொலிசாரால் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலை கலைப்பீட மாணவர்கள் நடத்தி வந்த பகிஷ்கரிப்பு போராட்டம் முடிவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் தவம் கிடக்கும் காட்சி

(காந்தன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப்பிரிவின் மருந்து வழங்கும் பிரிவில் நோயாளர்கள் காலை தொடக்கம் பிற்பகல் வரை நீண்டநேரம் காத்து நிற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தூர இடங்களில் இருந்து வரும் நோயாளர்கள் முதல் நாள் மாலை வந்து வைத்தியசாலையில் நின்று மறுநாள் வைத்திய சோதனையின் பின்னர் மருந்துக்கு நீண்டநேரம் காத்து நிற்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் மருந்துக்காக தவம் கிடப்பதை படத்தில் காணலாம்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.